REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 326 ஐப்பசி 6 ஆம் நாள் வியாழக்கிழமை 22 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

முச்சந்தி முரளி

"எல்லாம் முடிஞ்ச பிறகு தடையை நீக்கினால் என்ன, நீக்காட்டி என்ன? எல்லாம் ஒண்டு தான் பாருங்கோ"





# புலிகள் மீதான பிரிட்டனின் தடை நீடிப்பு தவறானது

## மேன்முறையீட்டு ஆணையம் தீர்ப்பு

லண்டன், ஒக்ரோபர் 22

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை கடந்த ஆண்டு நீடித்த பிரிட்டன், "உள்நாட்டலுவல்கள் திணைக்களத்தின் நடவடிக்கை தவறானது" என்று தடை செய்யப்பட்ட இயக்கங்கள் தொடர்பான மேன்முறையீட்டு ஆணையம் நேற்றுப் புதன்கிழமை தீர்ப்பளித்துள்ளது. 18

இரட்டைக்குடியுரிமை விவகாரம்:

# 20ஆவது திருத்த வரைவு நிறைவேறுவது சந்தேகம்?

- ஆளும் தரப்பின் 17 எம்.பிக்கள் கோத்தா, மஹிந்தவுக்கு மனு
- கோத்தாவின் சமரசப் பேச்சு தோல்வி
- ஆளும் தரப்புக்குள் கைகலப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

கோத்தாபய அரசு அவசர அவசரமாகக் கொண்டு வந்த 20ஆவது திருத்தச் சட்ட வரைவு மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றில் இன்று இரவு 18

## இன்றும் நாளையும் சபை அமர்வில் ரிஷாத்

கொழும்பு, ஒக். 22

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை இன்றும், நாளையும் நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்கச் செய்ய வேண்டும் என்று நாடாளு மன்ற படைக்கள 19

## தீயில் எரிந்து பெண் சாவு

வவுனியா, ஒக். 22

வவுனியா செட்டிகுளம் கங்கன்குளம் பகுதியில் தீயில் எரிந்து ஒரு பிள்ளை 19

## பிரிட்டன் அரசு தடையை நீக்காது

### இலங்கை அரசு நம்பிக்கை

கொழும்பு, ஒக்.22

பிரிட்டனின் மேன்முறையீட்டு ஆணையம், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை நீடிப்பு தவறு என்று 18

## கொடூர ஆட்சிக்கு ஆதரவு கிடையாது

சபையில் சம்பந்தன் இடித்துரைப்பு



06



## தமிழர் போராட்டத்தை ஒடுக்கும் இரும்புக் கரம் 20இன் பின்னால்

உண்மையை அம்பலப்படுத்திய விக்கி

06




வவுனியாவில்

## சமூகத்தில் உலாவிய மூவருக்கு கொரோனா

வவுனியா, ஒக்.22

வவுனியா, நெடுங்கேணியில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த மாகா நிறுவனத்தின் 19




## கோப்பாய் முகாமிலிருந்த ஒருவருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் தனி 19

## விஸ்வரூபம் எடுக்கும் சமூகத் தொற்று நாடு முழுவதும் முடங்க வேண்டி வரும்

### அபாயச் சங்கு ஊதுகிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, ஒக்.22

இலங்கையில் கொரோனாவின் வீரியத்தன்மை மேலும் அதிகரித்தால் முழு நாட்டையும் முடக்க வேண்டி வரும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலை 06



ஒரு லட்சம் வேலை வாய்ப்பு

## வடக்கில் 318 பேருக்கே முதல்கட்ட அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

கோத்தாபய அரசின் ஒரு லட்சம் பேருக்கான வேலைவாய்ப்புக் 06

# கொரோனாவைத் தடுக்க இவற்றை பின்பற்றுங்கள்

## மாகாண சுகாதார பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 22

**நாட்டில் கொரோனா பரவல் தீவிரமடைந்துவரும் நிலையில், இதனைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார். அறிவுறுத்தல்கள் வருமாறு,**

1. சுகாதார அமைச்சினால் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டமைக்கு அமைவாக கூட்டங்கள், ஒன்றுகூடல்கள், வைபவங்களைத் தவிர்த்துக்கொள்ளவும் அல்லது பிற்போடவும்.
2. சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு அமைவாக அலுவலகங்கள், பொது நிறுவனங்களில் முகக்கவசம் அணிதல், கை கழுவுதல், தனியாள் இடைவெளி பேணுதல் , உடல்வெப்பநிலை அளவிடுதல் மற்றும் வருகை தருவோரின் விவரங்கள் பதிவேட்டை பேணுதல் போன்றனவற்றை இறுக்கமாகப் பின்பற்றவேண்டும்.
3. பொது இடங்களில் முகக்கவசம் அணிதல் , தனியாள் இடைவெளி பேணுதல் கட்டாயமாக கடைப்பிடித்தல் வேண்டும். இல்லையேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம்.
4. தவிர்க்கமுடியாததட்டாயமாக நடத்தப்பட வேண்டிய நிகழ்வுகள் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான அங்கத்தவர்களுடன் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றி நடத்தப்படல் வேண்டும்.
5. வர்த்தக நிலையங்கள், சலூன்கள், உணவகங்கள் போன்றனவற்றுக்கு ஏற்கனவே சுகாதார அமைச்சு வழங்கிய வழிகாட்டல்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்
6. பொதுப்போக்குவரத்து வாகனங்களில் ஆசனங்களுக்கு அளவான பயணிகள் மட்டுமே பயணம் செய்யமுடியும்.
7. காய்ச்சல், இருமல், தடிமன், தொண்டை நோ உள்ளவர்கள் அலுவலகங்கள் அல்லது பொது இடங்களுக்கு செலவைத் தவிர்த்தல் வேண்டும்.
8. இயலுமானவரை நீண்டதூரப் பயணங்களைத் தவிர்த்தல் வேண்டும்.
9. பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கு மறு அறிவித்தல் வரை தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் மேற்குறிப்பிட்ட சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் கொரோனாத் தொற்று பரம்பலை எமது மாகாணத்தில் கட்டுப்படுத்த உதவவும். என்று அறிவுறுத்தியுள்ளார். (து)

# இராணுவத் தளபதி முல்லைக்கு விஜயம்

முல்லைத்தீவு, ஒக். 22

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று பயணம் மேற்கொண்டார்.

இரகசியமான முறையில் முல்லைத்தீவு-வவுனியா வீதி ஊடாக பாதுகாப்பு வாகனங்களுடன் பயணித்த அவர், மதியம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டார். பின்னர் கேப்பாபிலவிலுள்ள முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்துக்கு சென்று படையினரால் அமைக்கப்பட்ட தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையங்களின் நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (சு-19)

# திருட்டுக்கள், கொள்ளை: 2 வாரத்தில் ஐவர் கைது



யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கடந்த இரண்டு வாரங்களில் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர் பிரதேசத்தில் உள்ள வீடுகளில் திருட்டில் ஈடுபட்டனரென திருநெல்வேலி மற்றும் நல்லூரைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

இருவரிடமிருந்தும் திருட்டுப் பொருள்களான 15 மின்விசிறிகள், 2 நீர்ப்பம்பி மோட்டர்கள், சமையல் எரிவாயு சிலிண்டர்கள், றைஸ் குக்கர் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாக மருத்துவ மாணவர் ஒருவரின் மோட்டார் சைக்கிளைத் திருட முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கடந்தவாரம் கைதுசெய்யப்பட்டார். பரந்தனைச் சேர்ந்த அவரிடமிருந்து கைக்குண்டும் மேலும் திருட்டு மோட்டார் சைக்கி ஒன்றும் அவரிடமிருந்து மீட்கப்பட்டன. இவர்கள் அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவைதவிர, அரியாலையில் வீட்டில் இருந்தவர்கள் வெளியே சென்றிருந்தபோது வீடு புகுந்து கைச் சங்கிலியை திருடினார் என்ற குற்றச்சாட்டு மற்றும் யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள வீடொன்றில் நகைத் திருட்டில் ஈடுபட்டாரென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியைச் சேர்ந்த அவரிடமிருந்து சுமார் 15 பவுண் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வழிப்பறியில் ஈடுபடும் நோக்குடன் மோட்டார் சைக்கிளில் போலி இலக்கத்தகடுகளை பொருத்தியிருந்த யாழ்ப்பாணம் புறநகர் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (சு-26)

# முழுநாள் விவாதம் நாளை

கொரோனா, ஒக். 22

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் நாடாளுமன்றில் நாளை வெள்ளிக்கிழமை முழு நாள் விவாதம் நடைபெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க விடுத்த கோரிக்கைக்கு அமைய மேலும் ஒரு நாள் விவாதத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (சு44)

காரைநகர், ஊர்காவற்றுறை

# சுகாதார மருத்துவ அதிகாரிகள் நியமனம்

காரைநகர், ஒக். 22

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றும் மருத்துவர் எஸ். ஜெசிதரன் காரைநகர் சுகாதார பதில் மருத்துவ அதிகாரியாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை காரைநகர் சுகாதார பதில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றிய மருத்துவர் ப.நந்தகுமார் ஊர்காவற்றுறைக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார். (சு-50)

தமிழ்த்தேசியக் கட்சிகள்

# கூட்டமைப்பிலிருந்து வெளியேறியமை திறந்த மனதுடன் ஆராயப்படவேண்டும்

## இப்போதுள்ள ஒற்றுமை நீடித்து நிலைக்க அது முக்கியம் என்கிறார் சரவணபவன்

யாழ்ப்பாணம், ஒக்.22

தமிழ்க் கட்சிகள் ஒரே கட்டமைப்பாக இயங்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு, அதற்கான முயற்சிகளும் தொடங்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விடயம். ஆனால் ஐக்கியம் உறுதியாகவும், தடம்புரளாமலும் இருக்க வேண்டுமானால் கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டுப் பலரும் ஏன் வெளியேறினர் அல்லது வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்பதை விருப்பு, வெறுப்புக்களைக் கடந்து திறந்த மனதுடன் ஆராய வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள்தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கம் என்ற போர்வையில் ஒரு சில தீயசக்திகளால் புலி நீக்க, தேசியநீக்க இலக்கைக்கொண்ட மறைமுக நகர்வுகள் டனமேற்கொள்ளப்பட்டமை பற்றி ஆழமாகக் கவனத்தில் எடுக்கவேண்டும். இவற்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பின்னடைவும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்ட நம்பிக்கையீனங்களும் நன்கு பரிசீலிக்கப்படவேண்டும். இத்தகைய தீயசக்திகள் தொடர்பாக இனிவரும் காலங்களில் மிக விழிப்புடன் இருக்கவேண்டும். ஒரு கட்சி மேலாதிக்கம் என்ற போர்வையின் கீழ் தமிழ்த் தேசியத்தைச் சிதைக்கும் வகையில் உருவாக்கக்கூடிய நிலைமைகள் பற்றியும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

இந்த ஐக்கியத்துக்கான முயற்சிகளின் அடிப்படையில் இடம்பெற்ற கூட்டத்தின்போது தமிழர் சுயாட்சிக் கழகத்தினர் சபையை விட்டு வெளியேறி விட்டனர். ஏற்கனவே பிளவுகளுக்கு காரணமாய் அமைந்த குழப்பவாதிகள் அக் கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பதால் தாங்கள் அதில் கலந்துகொள்ளத் தயாரில்லை எனக் கூறி வெளியேறினர். இப்படியான வெளியேற்றங்கள் புதிய கட்டமைப்புக்களுள்ளும் குழப்பவாதிகள் பலம் பெறுவதற்கான வாய்ப்பையே உருவாக்கும் என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும். எனவே அவர்களோ, அவர்களைப் போன்ற கருத்துடையவர்களோ இக்கட்டமைப்பை விட்டு வெளியேறுவதைத் தவிர்த்து உள்ளிருந்து தேசியத்தை நேசிக்கும் சரியான சக்திகளுக்குத் தோள்கொடுத்து புதிய கட்டமைப்பை சரியான திசை மார்க்கத்தில் செல்வதற்கு உறுதியான பங்களிப்பை வழங்கவேண்டும் என்று அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக்கொள்கிறோம். என்றுள்ளது. (எ,ஒ)

# திருடப்பட்டது மோ.சைக்கிள்

வவுனியா, ஒக். 22

வவுனியா, ஆச்சிபுரம் பகுதியில், வீடு ஒன்றின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் நேற்று திருடப்பட்டுள்ளது சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (சு-18)

# சமூகத்தொற்று இல்லவே இல்லை



## பவித்திரா அழுங்குப்பிடி

**கொழும்பு, ஒக்.22**
**''இலங்கையில் கொரோனா வைரஸ் இன்னும் சமூகத் தொற்றாக மாறவில்லை என்று தொற்று நோய் விஞ்ஞான பிரிவு அறிவித்துள்ளது'' என்று சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாரச்சி தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவரால் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் சமூகத்தொற்றாக மாறவில்லை என தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சும், இந்தப் பிரிவும் சிறப்பாகவே செயற்பட்டு வருகின்றன.

யால பகுதியில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டார். அந்தப் பகுதிக்கு எதிர்க்கட்சித் தலைவரும் சென்றுள்ளார்.

அதனால் அவரை இரண்டாம் கட்டத் தொடர்பாளராகக் கண்டறிந்து உரிய தகவலை வழங்கினோம். இதைக் கொண்டாவது எமது சிறப்பான சேவையை எதிர்க்கட்சித் தலைவர் புரிந்துகொள்ள வேண்டும். தெற்காசியாவில் நாம்தான் முதலில் பி.சி.ஆர். பரிசோதனை முறைமை மேற்கொண்டோம். முதல் 50 ஆயிரம் பேருக்கு பரிசோதனை மேற்கொள்வதற்கு 3 மாதங்கள் அதாவது 95 நாள்கள் எடுத்தன. ஆனால் மினு வாங்கொட கொத்தணி பரவலையடுத்து ஒரு லட்சம் பேருக்குமேல் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 21 புதியஆய்வு கூடங்களை அமைத்துள்ளோம். அதனால் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைக்க வேண்டாம் - என்றார். (எ-44)

# சமூகத் தொற்றை மறைக்கிறது அரசு

## நாடாளுமன்றில் எதிர்க்கட்சி அரசு மீது கடும் பாய்ச்சல்

கொழும்பு, ஒக்.22

"இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் சமூகத் தொற்றாக மாறிவிட்டது. ஆனால் அதை நிராகரிக்கும் வகையில் சுகாதார அமைச்சர் கருத்து வெளியிட்டு வருகின்றார். அதாவது அரசு தகவல்களை மூடி மறைக்கின்றது" இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. அதில் ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பி கருத்துத் தெரிவித்தபோதே சஜித் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குளியாப்பிட்டிய மற்றும் அதை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்ட கொரோனா கொத்தணிப் பரவல் தற்போது சமூகத் தொற்றாக மாறியுள்ளது. அரச வைத்தியர்கள் அதிகாரிகள் சங்கமும் இது தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆனால் சுகாதார அமைச்சர் பொறுப்பற்ற விதத்தில் கருத்து வெளியிட்டு வருகின்றார்.

சமூகத் தொற்று உள்ளது என சுட்டிக்காட்டியும், அவ்வாறு இல்லை என அவர் கூறுகின்றார். இந்த அரசு எல்லாவற்றையும் மறைக்கின்றது. ஆனால் நாம் ஒன்றையும் மறைக்கவில்லை. சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றுகின்றோம். பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரங்கள் உடைந்துள்ளன. முழு நாடும் ஸ்தம்பித நிலையில் உள்ளது. பொருளாதாரமும் முடங்கியுள்ளது. நாட்டில் பெரும் சுகாதார பிரச்சினை காணப்படுகின்றது -என்றார். (எ-44)



# மாயமான மீனவர்களை தேடும் பணிகள் தீவிரம்

முல்லைத்தீவு, ஒக்.22

முல்லைத்தீவில் கடலுக்குச் சென்று கரை திரும்பாத இரு மீனவர்களைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மாயமான மீனவர்களைத் தேடி 19 படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு, மணற்குடியிருப்பு கிராம கடற்றொழிலாளர் சங்கத்துக்கு உட்பட்ட மீனவர்கள் இருவர் கடந்த திங்கட்கிழமை அதிகாலை கடலுக்குச் சென்றிருந்தனர்.

அவர்கள் இதுவரை கரை திரும்பவில்லை. இது தொடர்பாக முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினர், கடற்படையினர், பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மீனவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

காணாமல் போயுள்ள மீனவர்களைத் தேடும் பணிகளில் அந்தப் பகுதி மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் தேடுதல் நடத்தப்பட்டிருந்த நிலையில், நேற்றும் அதிகாலை முதல் மீனவர்களைத் தேடும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-19,246)

# இரட்டைக் குடியுரிமை: மக்கள் முடிவே இறுதி

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.22

இரட்டை குடியுரிமையுடைய ஒருவர் மக்கள் பிரதிநிதியாக' வர வேண்டுமா? இல்லையா ? என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

1978 முதல் 19 ஆவது திருத்தம் உருவாக்கப்படும் வரை நாட்டில் இரட்டை குடியுரிமையுடைய பலர் இருந்தனர்.

19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டபோது எமது தரப்பில் நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்கு இதனால் பிரச்சினை ஏற்பட்டது. அவர் எழுத்துமூலம் அதனை நீக்குமாறு கோரியும் நீக்கப்படவில்லை. அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் என்ன தீர்மானம் எடுப்பது? இரட்டை குடியுரிமையுடைய ஒருவர் மக்கள் பிரதிநிதியாக வர வேண்டுமா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். இது சர்வஜன வாக்கெடுப்புக்கு இணையானதொன்றாகும்.

இந்நிலையில் முழுமையாக புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

அதில் இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தார். (வ-இ)

# தரம் –5 விடைத்தாள் திருத்தும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஒக்.22

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

கம்பஹா மாவட்டம் மற்றும் குளியாப்பிட்டிய கல்வி வலயம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் விடைத்தாள் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும், 27 ஆம் திகதிவரை 39 மத்திய நிலையங்களில் இந்தப் பணிகள் நடைபெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பரிசோதகர்களுக்கும் விடைத்தாள் திருத்தும் பணிகளுக்கு வருமாறு குறுஞ்செய்தி ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# கம்பஹாவில் ஒரு வாரம் ஊரடங்கு!

கொழும்பு, ஒக்.22

கம்பஹா மாவட்டத்தில் நேற்று முதல் ஒரு வாரத்துக்கு ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று இரவு 10 மணி முதல் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 5 மணி வரையில் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

# 12 ஆயிரம் பனம் விதைகள் நடுகைத் திட்டம் ஆரம்பம்

மன்னார் மாவட்டத்தில் 12 ஆயிரம் பனம் விதைகளை நடுவதற்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் 180க்கும் மேற்பட்ட மரங்கள் நேற்று (நேற்றுமுன்தினம்) வழங்கப்பட்டன. மன்னார் வனவளத் துறையினரின் ஒத்துழைப்போடு ஒவ்வொரு பிரசேங்களிலும் மர நடுகை சம்பந்தமான வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது சுற்றுலாத்துறையை விரிவுபடுத்தும் நோக்கத்தோடு உள்ளூராட்சி மன்றங்களும் அதன் பொறுப்புக்களை எடுத்திருக்கின்றன. இதனடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் கவர்ச்சிதரக்கூடிய மரங்களை நடுவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் சுற்றுச்சூழல் அதிகார சபையினால் மரங்களை நடுவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டிருக்கின்றன- என மன்னார் பதில் மாவட்டச் செயலர் சிவபாலன் குணபாலன் தெரிவித்துள்ளார். (ந-213)

# சர்வதேச சக்திகளுக்கு அரசு அடிபணியாது

## உதய கம்மன்பில திட்டவட்டம்



**கொழும்பு, ஒக்.22**
**தற்போதைய அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு அடிபணியாது என அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2009 இல் பிரிட்டன் வெளிநாட்டலுவல்கள் செயலாளரும், பிரான்ஸின் வெளிநாட்டுறவுகள் அமைச்சரும் இலங்கைக்கு வந்து போரை நிறுத்துமாறு அழுத்தம் பிரயோகித்தனர். ஆனால் போர் நிறுத்தப்பட்டதா? எனவே தற்போதைய அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு அடிபணியாது என்பதை உறுதியாகக் கூறுகின்றேன். தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது தமக்கு அழுத்தம் பிரயோகிப்பதற்காக வந்த இராஜதந்திர தூதுவர்களுக்கு மிகவும் கடுமையாக இலங்கை சுயாதீனத்தன்மையும் இறையாண்மையும் உடைய நாடு என்பதைக் காண்பித்தார். எனவே இலங்கை ஒருபோதும் வெளிநாட்டு சக்திகளுக்கு அடிபணியாது என்ற தீர்க்கமான உத்தரவாதத்தை எம்மால் வழங்க முடியும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## கோட்டை பொலிஸ் மீண்டும் திறப்பு

கொழும்பு, ஒக்.22
தற்காலிகமாக மூடப்பட்டிருந்த கோட்டை பொலிஸ் நிலையம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கோட்டை பொலிஸ் அதிகாரி ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி இருந்தமை இனங்காணப்பட்டதை அடுத்து பொலிஸ் நிலையம் மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில் கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையம் வழமையான சேவைகளுக்காக மீளத் திறக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (வ-இ)



## பொதுமக்கள் பார்வைக்கு பிரதேச சபை பாதீடு


பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பாதீட்டை பொதுமக்கள் பார்வையிட்டு தங்கள் அபிப்பிராயங்கள், ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகளை தவிசாளருக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்க முடியும் என சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஒக்ரோபர் 21ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி வரை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தலைமை அலுவலகம், புலோப்பளை உப அலுவலகம், புலோப்பளை பொது நூலகம், முள்ளிப்பற்று உப அலுவலகம், முள்ளிப்பற்று பொது நூலகம், முகமாலை உப அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் ஆகியவற்றில் பாதீடு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (ந-6)

## மட்டக்களப்பிலும் விளக்கு அணைத்து போராட்டம்

20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக மட்டக்களப்பிலும் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு விளக்குகள் அணைக்கப்பட்டு மெழுகுதிரிகள் ஏற்றப்பட்டு எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் இராசமாணிக்கம் இல்லத்தில் ஒன்றுகூடிய இளைஞர்கள் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதன்போது வீட்டின் மின்குமிழ்கள் அணைக்கப்பட்டு கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி தமது போராட்டங்களை முன்னெடுத்தனர். 20வது திருத்தச் சட்டம் என்பது தமிழ் மக்களை இந்த நாட்டில் குழிதோண்டி புதைக்கும் சட்டம் எனவும் அதற்கு எதிராக சிறுபான்மை கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும் எனவும் இளைஞர்கள் கோரிக்கை விடுத்தனர். (ந-இ)



வடமராட்சி இளைஞர்களால் வல்லைப் பாலத்தில், நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக தீப்பந்தமேந்திப் போராட்டமொன்று முன்னெடுக் கப்பட்டுள்ளது. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான இளைஞர் செயற்பாட்டுக் குழுவின் வேண்டுகோளுக்கு அமைய இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-20)

## முல்லைத்தீவு – வவுனியா தனியார் பஸ் சேவை பணிப் புறக்கணிப்பு

முல்லைத்தீவு, ஒக்.22
நேர அட்டவணையிலுள்ள பிரச்சினைகளால் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தனியார் போக்குவரத்து பஸ் உரிமையாளர்கள் வவுனியா மாவட்டத்துக்கான போக்குவரத்தைப் புறக்கணித்துள்ளனர். இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கம் கருத்து தெரிவிக்கையில்;

கடந்த 2016ஆம் ஆண்டு வடமாகாண முன்னாள் அமைச்சர் டெனிஸ்வரனால் போடப்பட்ட நேர அட்டவணை பிழை என வீதிப்பயணிகள் அதிகாரசபைக்கு எழுத்துமூலம் கொடுக்கப்பட்டுள்ளது. கொரோனா காலத்தில் பயணிகள் மிகவும் குறைவான நேரத்தில் புதிய நேர அட்டவணைப்படி சேவையை மேற்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட செயலர் தலைமையில் நடைபெற்ற கொரோனா தொடர்பிலான கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் எமது சங்கத்துக்கு எதுவித அறிவித்தலும் வழங்கப்படவில்லை. இந் நிலையில் வவுனியாவிலிருந்து 6.10 மணிக்கு புறப்படும் முல்லைத்தீவுக்கான பஸ்ஸை வவுனியா மாவட்ட நேரக்கணிப்பாளர் மாகாணசபை நேரக்கணிப்பாளர், வவுனியா மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கத் தலைவர் இணைந்து பொலிஸாரின் உதவியுடன் வவுனியாவில் இருந்து கடந்த திங்கட்கிழமை 5.40 மணிக்கு வெளியேற்றியுள்ளனர்.

இதற்கான நீதி கிடைக்கும் வரை முல்லைத்தீவு மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கம் சேவையை இடைநிறுத்துகின்றது எனத் தெரிவித்துள்ளனர். (வ-19)



# மழை வெள்ளம் தேங்கும் வீதி: சீரமைத்து தருமாறு போராட்டம்

கிளிநொச்சி, ஒக்.22
கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் முக்கிய வீதி ஒன்றில் மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிராம மக்களால் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.



ஸ்கந்தபுரம் பொதுச் சந்தைக்கு அருகில் செல்லும் வீதியில், மழை காலத்தில் பல இடங்களில் நீண்ட தூரங்களுக்கு மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்து செய்யமுடியாது. மாணவர்கள் பாடசாலைக்கு நடந்து செல்ல முடியாது எனத் தெரிவித்த மக்கள், குறித்த வெள்ள நீர் வழிந்தோடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில், அங்கு சென்ற கிராம அலுவலர் மக்களுடன் கலந்துரையாடி குறித்த வெள்ள நீரை அகற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். சம்பவ இடத்துக்கு வந்த கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சு.தயாபரன் மழை வெள்ளம் ஏற்படுத்தும் பாதிப்புகளைக் கேட்டறிந்ததுடன் அதனை எவ்வாறு வழிந்தோட வைப்பது என மக்களுடன் கலந்துரையாடினார்.

குறித்த வெள்ள நீரைத் தற்போது குடியிருக்கும் மக்களின் காணிகளுக்கு ஊடாக முதற்கட்டமாக வழிந்தோடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (ந-ரி2)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கொரோனாவின் கோரத்துக்கு மக்கள் மன்று விதிவிலக்கல்ல

இலங்கையில் கொரோனா மூன்றாவது அலை விஸ்வ ரூபமாக உருவெடுத்துள்ளது. இதனால் சமூக இடைவெளியைப் பின்பற்றுதல், மாஸ்க் அணிதல் என்பன கட்டாயமாக்கப்பட்டுள்ளன. மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்த விதிகளை மீறுபவர்கள் 10 ஆயிரம் ரூபா தண்டமாகச் செலுத்தும் நிலையோ அல்லது 6 மாதங்களுக்குச் சிறையில் இருக்கவேண்டிய துர்ப்பாக்கியமோ ஏற்படலாம். ஆனால் இலங்கையின் சட்டதிட்டங்களைப் பேணிக்காக்க வேண்டிய அந்தச் சட்டங்களை உருவாக்கும் அதியுயர் சபையான நாடாளுமன்றமே இந்த விடயத்தில் மெத்தனப்போக்குடன் செயற்படுகின்றமை நிச்சயம் வேதனைக்குரியது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. உறுப்பினர்கள் இது தொடர்பில் தமது கருத்துக்களை முன்வைக்கும் முன்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சில கோரிக்கைகளை முன்வைத்திருந்தார். 'நாட்டில் தற்போது காணப்படும் சுகாதார நெருக்கடி நிலையைக் கருத்தில்கொண்டு நாடாளுமன்றில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். சமூக இடைவெளியைப் பின்பற்றி ஆசனங்கள் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறாக சுகாதாரப் பாதுகாப்பு இல்லாமல் இந்தக் கூட்டத்தை நடத்துவது தவறானது.

மக்களுக்கு ஒரு நீதி, மக்கள் மன்றுக்கு ஒரு நீதியா?' என்றவாறாக அவர் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்குப் பதில் வழங்கிய சுகாதார அமைச்சர், 'நாடாளுமன்றம் விதிவிலக்கானது. அது பொது நிறுவனங்கள் என்ற கட்டமைப்பின் கீழ் வராது' என்று தெரிவித்தார். இது எவ்வளவு பாரதூரமான, தவறான கருத்து.

சுகாதார அமைச்சர் ஒருவரே சுகாதார நெருக்கடியைப் புறந்தள்ளி கருத்து வெளியிடுவது என்பது இலங்கையில் மட்டும்தான் நடக்கக்கூடிய விடயம். ஆக, சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட இடங்களில் கொரோனாத் தொற்று ஏற்படும். சட்டதிட்டங்களுக்கு அப்பாற்பட்ட இடங்களில் கொரோனாத் தொற்று ஏற்படாது. இதுதான் சுகாதார அமைச்சருடைய கருத்தின் சாராம்சம். எனில், சட்டம்தான் கொரோனாத் தொற்றைத் தீர்மானிக்கின்றதா? என்ற இமாலயக் கேள்வியை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியை நோக்கி முன்வைக்க வேண்டியிருக்கின்றது. நாடாளுமன்றத்தில் இருப்பவர்கள் மக்களின் பிரதிநிதிகள். பெருந்தொற்று மேலும் பூதாகரமாகினால் அவர்கள்தான் களத்தில் நின்று மக்கள் பணி ஆற்றப்போகின்றார்கள். இதனால் சுகாதார நெருக்கடி நிலைமைக்கும் அவர்களுக்கும் தொடர்பில்லை என்று கூறிவிட முடியாது.

20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் இந்த அரசு எவ்வளவுதூரம் கடும் முனைப்புக் கொண்டிருக்கின்றது என்பதையும், பித்துப்பிடித்தால்போல் செயற்படுகின்றது என்பதையும் நேற்றுமுன்தின அமர்வு நன்றாகவே வெளிப்படுத்திவிட்டது. மக்கள் நலன்களோ அவர்கள் சார்ந்த திட்டங்களோ ராஜபக்ச அரசுக்கு முக்கியம் அல்ல. தம்மைப் பலப்படுத்துவதே ராஜபக்சக்களின் தலையாய கடமை. அதற்காக எந்த எல்லைக்கும் அவர்கள் செல்வார்கள். 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றும் வரையில் கொரோனாவின் மூன்றாவது அலை சமூகத் தொற்றாக உருவெடுக்கவில்லை என்று சொல்லும் இந்த அரசு 20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட மறுநாளே நாட்டை முடக்கினாலும் வியப்பில்லை.

# கொரோனாவுடன் டெங்குத் தாக்கமும்

யாழ்ப்பாணம்,ஒக்.22

**கொரோனாத் தொற்றைத் தடுக்க முகக்கவசங்களை அணிவதோடு மட்டுமல்லாது, டெங்குத் தொற்றுப் பரவுகின்ற சூழ்நிலைகளையும் இல்லாது செய்ய வேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா கோரிக்கை விடுத்துள்ளார்**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குத் தொற்று மீள ஆரம்பித்துள்ளது. நேற்றுமுன்தினம் மாத்திரம் 5 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பாசையூர் ,சுழிபுரம், சுன்னாகம், அரியாலை, கோப்பாய் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால், நுளம்புப் பெருக்கம் அதிகமாகக் காணப்படும். எனவே மக்கள் சுற்றுச்சூழலை மிகவும் தூய்மையாகப் பேண வேண்டியதும் அவசியமாகும். நாட்டில் கொரோனாத் தொற்றும் அதிகரித்துள்ள நிலையில், டெங்குத் தொற்று ஏற்படுமாயின், இரட்டை நோய்த் தொற்று ஏற்படலாம். எனவே பொதுமக்கள் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் தொற்றுக்களைத் தடுக்க முடியும் - என்றார். (க-111,20)

## ரஞ்சனுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஒக்.22



நீதிமன்றத்தை அவமதித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள, முன்னாள் அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு, நவம்பர் மாதம் 6 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று உயர் நீதிமன்றம் அறிவித்தது.

முறைப்பாடு சிசிர த ஆப்ரூ, விஜித் மல்லல்கொட மற்றும் பிரீதி பத்மன் சூரசேன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இருப்பினும் பிரதிவாதி சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி முன்னிலையாகவில்லை. அதனால் வேறு ஒரு தினத்தை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் முறைப்பாட்டை நவம்பர் மாதம் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (க-இ)

## பேலியகொட சந்தையில் 49 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஒக்.22

பேலியகொட மீன் சந்தையில் 46 வர்த்தகர்கள் உட்பட 49 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது என்று சுகாதார மருத்துவ அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதியில் 105 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் 49 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து பேலியகொட மீன் சந்தை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று சுகாதார மருத்துவ அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (க-இ)

## நோயாளருக்கு கொரோனா

கொழும்பு,ஒக்.22



கொழும்பு தேசிய மருத்துவமனையின் 46 ஆம் இலக்க விடுதியில் சிகிச்சை பெற்ற நோயாளர் ஒருவர், கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, அங்கு சிகிச்சை பெற்ற அனைத்து நோயாளர்களும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (க-இ)

# பொதுமக்கள் தினம் உட்பட அனைத்து கூட்டங்களும் ரத்து

கொழும்பு,ஒக்.22

பொதுமக்கள் தினம் உட்பட அனைத்து கூட்டங்களையும் இரத்துச் செய்வதற்கு அரச சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதனையடுத்து, சேவை பெறுநர்களுக்காக புதிய சேவை ஒன்றை அறிமுகம் செய்ய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் அரச சேவை ஆணைக்குழுவில் கோரிக்கையை முன்வைக்கும் போது, அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கத்தைப் பதிவு செய்வதன் ஊடாக தொலைபேசி இலக்கத்துக்கு விஷேட இலக்கம் ஒன்று குறுஞ் செய்தி ஊடாக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

PSC <இடைவெளி>, விஷேட இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு 0704364462 என்ற இலக்கத்துக்கு குறுஞ்செய்தி அனுப்பவதன் ஊடாக, கோரிக்கை தொடர்பான தற்போதைய நிலைமையை உடனடியாக அறிந்து கொள்ள முடியும்.

அல்லது www.psc.gov.lk என்ற இணையத்தளத்தில் விஷேட இலக்கத்தைப் பதிவு செய்து தகவல்களை அறிந்துகொள்ள முடியும்.

அவ்வாறு இல்லாவிடின் 011 2136600 (பொது), 011 - 2136603 (மேலதிக செயலாளர்), 011 - 2136617 (செயலாளர்) என்ற இலக்கங்களுக்குத் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

விஷேட அழைப்பு இருந்தால் மட்டும் அலுவலகங்களுக்கு வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

கொடூர ஆட்சிக்கு...

அரசு முன்வைத்துள்ள 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு நாட்டை சர்வாதிகாரத்தின் பக்கம் கொண்டு செல்கின்றது. ஜனநாயகத்தை சர்வாதிகாரமாக மாற்றுவதற்கான எந்தவொரு ஆணையும் மக்களிடமிருந்து பெறப்படவில்லை. அதனாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 20ஆவது திருத்தச் சட்ட வரைவை எதிர்க்கின்றது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு மீதான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் இறையாண்மையானது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் இருக்க வேண்டும். சட்டவாக்கம், நிர்வாகம், நிறைவேற்று அதிகாரம் எப்போதும் இறையாண்மையை மிஞ்சிய விதத்தில் செயற்பட முடியாது. மக்கள் ஆணையின் மூலமாகத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் கால எல்லைக்குள் முழுமையான மக்கள் பிரதிநிதிகளாக அடையாளப்படுத்தப்பட வேண்டும். நீதித்துறை சுயாதீனம் எந்தவித தலையீடுகளும் இல்லாது செயற்பட வேண்டும்.

அது மட்டுமன்றி தனிநபரிடம் நாட்டின் இறையாண்மை அடிபணியக்கூடாது. இறையாண்மை என்பது தனிநபரின் விருப்பம் அல்ல. இந்த மூன்று பிரதான விடயங்களும் அதனுடன் இணைந்து வாக்குரிமை, சுயாதீன ஆணைக் குழுக்களைப் பாதுகாக்கும் செயற்பாடுகளும் பாதுகாக்கப்பட வேண்டும். ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள், நீதிபதிகள் போன்றோரை நியமித்தல் மற்றும் நீக்குதல் ஆகியவற்றின் அதிகாரம் ஒருவருக்கு வழங்கப்படுவது ஏற்றுக் கொள்ள முடியாதது.

ஆனால், அரசு முன்வைத்துள்ள 20ஆவது திருத்தச் சட்ட வரைவு நாட்டை சர்வாதிகாரத்தின் பக்கம் கொண்டு செல்கின்றது. ஜனநாயகம் மறுக்கப்பட்டு நாடு சர்வாதிகாரத்தின் பக்கம் பயணிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. இப்போது நடைமுறையில் இருக்கும் 19ஆவது திருத்தச் சட்டத்தையே தொடர்ந்தும் முன்னெடுத்துக்கொண்டு செல்லமுடியும். அதில் எந்தவித முரண்பாடுகளும் ஏற்படப்போவதில்லை. மக்கள் ஆணையுடன் ஏன் இதனைத் தொடர்ந்தும் கொண்டு செல்ல முடியாது?

அரசின் இந்தச் செயற்பாடுகள் நாட்டில் பிரிவினையை உருவாக்கிவிடும் என்ற அச்சம் உள்ளது. நாட்டைப் பிரிவினையின் பக்கம் கொண்டுசெல்லும் எந்தவொரு செயற்பாட்டையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்காது. அதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவும் இல்லை.

1956 ஆம் ஆண்டில் இருந்தே தமிழ் மக்களின் மிகத் தெளிவான ஆணையாதெனில் தமிழர்களின் உரிமை, நியாயங்கள் மதிக்கப்பட வேண்டும் என்பது. தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டில் தமிழ் மக்கள் உள்ளனர். எனவே, தமிழ் மக்களின் இறையாண்மையையும், உரிமைகளையும் பாதுகாக்கும் தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதனை எவரும் புறந்தள்ளிவிட முடியாது. அதேபோல் புதிய அரசமைப்பை உருவாக்கும் வேளையில் நாட்டின் சகல மக்களின் இணக்கத்துடன் உருவாக்கப்பட வேண்டும்.

பெரும்பான்மை மக்களின் அங்கீகாரம் இல்லாத அரசமைப்பை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அதேபோல் புதிய அரசமைப்பில் சிங்கள மக்களின் நிலைப்பாட்டை மாத்திரம் கருத்தில் கொள்ளாது தமிழ் மக்களின் நிலைப்பாட்டையும் கருத்தில்கொள்ள வேண்டும். இல்லையென்றால் அதனையும் நாம் நிராகரிப்போம், என்றார். (ஒ,22)

தமிழர் போராட்டத்தை...

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் ஊடாக ஜனநாயகத்தில் இருந்து சர்வாதிகாரத்தை நோக்கி ஆட்சிப் பண்புகளின் பரிணாமம், திசை மாறுவதற்கான காரணம் வெறுமனே பதவி மோகம் மட்டும் அல்ல. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சில அரசியல் நிகழ்வுகளுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக இதனைப் பார்க்கின்றோம். தமிழ் மக்கள் தம் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராகவும் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் மேற்கொண்டு வரும் ஜனநாயக ரீதியான போராட்டங்களை மேற்கொள்வதற்கு காணப்படும் ஒரு சில ஜனநாயக இடைவெளிகளையும் அடைத்து இரும்புக்கரம் கொண்டு எமது போராட்டத்தை நசுக்குவதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டமும் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவின் பின்னால் இருக்கின்றது என உணர்கின்றோம். இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் சபையில் நேற்று தெரிவித்தார்.

20 ஆவது திருத்தப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவர் மேற்கண்டவாறு கூறினார்.

யார் யார் எல்லாம் இந்த 20 ஆவது சட்ட திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு இன்று பாடுபடுகிறார்களோ, யார் யார் எல்லாம் இதற்கு ஆதரவு அளிக்கிறார்களோ அவர்கள் எல்லோரும் எதிர்காலத்தில் இதே சட்டத்திருத்தத்தை நீக்க வேண்டும் என்று வீதிகளில் இறங்கிப் போராடும் நிலை நிச்சயம் ஏற்படும் என்றும், கட்சி பேதம் இன்றி அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தச் சட்ட திருத்தத்தை தோற்கடிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (ஒ,22)

(அவரது முழுமையான நாடாளுமன்ற உரை நாளை பிரசுரமாகும்)

வடக்கில்...

களில் முதல் கட்டமாக 34 ஆயிரத்து 818 பேருக்கு இன்று நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. அதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 318 பேர் மாத்திரம் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

குறைந்த கல்வித் தகைமை உடைய ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கும் திட்டம் கோத்தாபய ஜனாதிபதியான பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதற்கான நேர்முகத் தேர்வு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்றது. வடக்கு மாகாணத்திலிருந்து சுமார் 26 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர். வடக்கு மாகாணத்தில் 13 ஆயிரத்து 400 பேருக்கு முதல் கட்டத்தில் நியமனம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் திடீரென வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மாத்திரமே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. கிராமத்துக்கு 10 பேர் என்ற அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் 9 ஆயிரத்து 300 பேருக்கு முதல் கட்டத்தில் நியமனம் வழங்கப்படும் என்று கூறப்பட்டது.

ஆனால் தற்போது 318 பேருக்கு மாத்திரமே நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் 96 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 12பேரும், வவுனியா மாவட்டத்தில் 112பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 55பேரும், மன்னார் மாவட்டத்தில் 43பேரும் இந்த நியமனத்துக்காக முதல் கட்டத்தில் தெரிவாகியுள்ளனர். இவர்கள் தமக்குரிய பிரதேச செயலகங்களில் இன்று பொறுப்பேற்கவுள்ளனர். இவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் இணையம் ஊடாக எதிர்வரும் 26, 27 மற்றும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளன. (ஒ,5)

விஸ்வரூபம்...

வரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கொரோனாவின் மூன்றாவது அலை வெவ்வேறு இடங்களில் சமூகத்துக்குள் ஊடுருவியுள்ளது. பேலியகொட மீன் சந்தையில் 49 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டமை எமக்குப் பெரும் சவாலாக மாறியுள்ளது. இதையடுத்தே கம்பஹா மாவட்டம் முழுவதிலும் ஊரடங்கை அறிவித்துள்ளோம். அதேவேளை, கொரோனாவின் அச்சத்தால் சில மாவட்டங்களில் சில பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன.

இன்னும் சில நாள்களில் கொரோனாவின் வீரியத்தன்மையைக் கருத்தில்கொண்டே முழு நாட்டையும் முடக்க வேண்டுமா என்பது தொடர்பில் தீர்மானம் எடுப்போம். இதுவரைக்கும் நாட்டை முடக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

சுகாதார வழிகாட்டல்களையும், தனிமைப்படுத்தல் சட்டத்தையும் மக்கள் முறையாகக் க்டைப்பிடித்தால் கொரோனாவின் மூன்றாவது அலைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும், என்றார்.

இதேவேளை, நாட்டில் நேற்று 166 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். (ஒ,5,22)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலகில் மாந்தருடன்
18 • 11 • 1969



விண்ணுலகில் மாதேவனுடன்
20 • 09 • 2020

### அமரர் P.K. பாலசிங்கம் பாலஸங்கர்


இல்லத்தின் அரசனாய் விளங்கினாய் ஸங்கர்
இலட்சியத்தின் முடிவுகாண இரவு பகலாய் உழைத்தாய்
குடும்பத்தின் குலவிளக்காய் குத்துவிளக்கானாய்
உற்றார் உறவினர்களுடன் குதூகலமாக மகிழ்ந்தாய்
கைபிடித்த **மனைவிக்கு** உற்ற கணவனாய்
**பிள்ளைகளுக்கு** நல்ல தகப்பனாய் வாழ்ந்த வாழ்க்கை
போதும் என்று நல்லைக் கந்தன் பாதம் எனபுறப்பட்டாய்
அமைதியாய் உறங்கிடும் ஐயா..

**"விதானை சங்கரியார் வளவு"**
**718, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
10 • 08 • 1947



ஆண்டவன் அடியில்
03 • 11 • 2019

### அமரர் சண்முகம் சாந்தலிங்கம்

(வர்த்தகரும் பிரபல கட்டட ஒப்பந்த காரரும்,
ஸ்ரீ சுகந்தி கட்டடப் பொருள் விற்பனை நிலைய உரிமையாளரும்)

**திதி: வளர்பிறை சப்தமி**

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் கண்மணியே உன் பிரிவால்
மீண்டெழ முடியாமல் அன்னையவள் தவிக்கின்றாள்
கண்ணை இமை காப்பது போல எம்மைக் காத்தவரே
எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்?
நாள்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி
மாதங்கள் வருடமாகியும் உங்கள் நினைவுத்
துயரிலிருந்து மீண்டெழ முடியவில்லை
உங்கள் கைபிடித்து கடைத்தெருவில் நடந்த
உங்கள் பிள்ளைகள் அப்பா என்று இன்றும் அழுகின்றனர்
உடன் பிறந்த உறவுகளோ இம் மண்ணில்
உங்கள் நினைவால் அனுதினமும் வாடுகின்றனர்
ஆண்டொன்று ஆகியென்ன ஒரு யுகம் தான் ஆனாலும்
எம்முடலில் உயிர் இருக்கும் வரை உங்கள் நினைவு
அழியாதென்று உங்கள் உறவுகள் இங்கு அழுது புலம்புகின்றனர்
கருணையில்லாக் காலனவன் உங்களை அழைத்தாலும்
உங்கள் ஆத்மா ஈடேற வேண்டுமென்றே எந்நாளும்
- வேண்டுகின்றோம்.

**30/5, மூத்த விநாயகர் வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

உங்கள் நினைவில்
**குடும்பத்தினர்.**

# நாட்டை முன்னேற்ற அதிகாரம் எதற்கு?

## பிரதமரின் கருத்துக்கு ராஜித பதிலடி

கொழும்பு, ஒக். 22

ஒரு நாட்டை வளப்படுத்த ஜனாதிபதியிடம் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அதிகாரங்கள் எதற்கு? என எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்று ஆரம்பமான 20ஆவது திருத்தத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது: 'பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ '19'ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டியிருந்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இருந்த காலப்பகுதியில்தான் இந்த நாட்டில் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. போர் முதற்கொண்டு தெற்கில் ஏற்பட்ட கிளர்ச்சிகள் வரை அந்தக் காலத்தில்தான் இடம்பெற்றன. அதே போன்று, இன்று உலகில் இஸ்ரேல், ஜப்பான் போன்ற நாடுகளில் ஜனாதிபதி முறைமை இல்லை. மாறாக, 19ஆவது திருத்தத்தைப்போன்ற நல்லாட்சி அரசமைப்புக்களே அந்த நாடுகளில் காணப்படுகின்றன. இவைதான், அந்த நாடுகளின் முன்னேற்றத்துக்குக் காரணமாகும்.

எனவே, ஒரு நாட்டை முன்னேற்ற அதிகாரங்கள் அவசியம் என்பதை நான் என்றும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. ஆணைக்குழுக்கள், நாடாளுமன்றின் அதிகாரங்கள் எல்லாம் ஜனாதிபதியிடம் குவிக்கப்படவுள்ளன.

அதிகாரம் ஒருவரிடம் குவிக்கப்படுவதால், குறித்த நபர் அழிவடைவதோடு நாடும் அழிவடையும். இதனைத்தான் நாம் கடந்த காலங்களில் கண்டுள்ளோம். நீதித்துறை, நிறைவேற்றுத் துறை, சட்டவாக்கத்துறை என மூன்றும் சரி சமனாகப் பயணிப்பதே ஜனநாயகத்தை வலுப்படுத்தும். இவ்வாறு இல்லாவிட்டால் ஒரு நாட்டில் ஜனநாயகம் பலமானதாக இருக்காது. இது மக்களின் உரிமையையும் பாதிக்கும்' - என்றார். (ம-இ)

# இரட்டைக் குடியுரிமையால் இறைமைக்குப் பாதிப்புகள்

## வாசுதேவ சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 22

நாட்டின் இறையாண்மையைக் கருத்திற்கொண்டு, இரட்டைக் குடியுரிமை நாட்டுக்குத் தேவையில்லை என்பதே எனது நிலைப்பாடு என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். நாடாளுமன்றில் நேற்றுப் புதன்கிழமை ஆரம்பமான 20ஆவது திருத்தத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஜனநாயகம்தான் இன்று முக்கியமாகக் காணப்படுகிறது. எனினும், உலகில் எந்தவொரு நாட்டிலும் முழுமையான ஜனநாகம் இல்லை என்றே கூறவேண்டும். ஒவ்வொரு நாடுகளும், தங்களுக்கு ஏற்ற வகையில் ஜனநாயகத்தை மாற்றிக்கொண்டேதான் செல்கின்றன. அந்தவகையில், இலங்கையும் அதற்கேற்ற ஜனநாயகத்தை அரசமைப்பின் ஊடாக தெரிவுசெய்துள்ளது.

என்னைப் பொறுத்தவரை நேரடி ஜனநாயக முறைமையே சரியான ஜனநாயகமாக நான் கருதுகிறேன். இதன்படி, '19'ஐ முழுமையான ஜனநாயக திருத்தச் சட்டமாக ஒருபோதும் கருதமுடியாது. அதற்கு நாம் அன்று வாக்களித்தோம். எனினும், அதன் ஊடாக ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இடையில் முரண்பாடுகள் காணப்பட்டன. ஈஸ்டர் தாக்குதல், மத்திய வங்கி பிணைமுறி மோசடி என்பன நல்லாட்சி காலத்தில் இடம்பெற்றன. அந்த ஆட்சி இறந்து விட்டது. இந்த அரசாங்கத்தினால் நான் கூறிய அந்த இரண்டு விடயங்கள் மட்டும்தான் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

அந்த ஆட்சிக்கு ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என அனைவரும் ஆதரவளித்தார்கள். எனினும், அந்த ஆட்சியை மக்கள் நிராகரித்தார்கள். தற்போது புதிய அரசு ஆட்சிக்கு வந்துள்ளது. எமது அரசு எதிர்காலத்திலும் திருத்தங்களைக் கொண்டு வரும். புரிய அரசமைப்பை உருவாக்கும். அத்தோடு, இரட்டைக் குடியுரிமை தொடர்பாக விமர்சிக்கப்படுகிறது. கடந்த காலத்தில் கோத்தபாய ராஜபக்ஷவை இலக்குவைத்தே இரட்டைக் குடியுரிமை முறைமையை 19இன் ஊடாக நல்லாட்சியினர் தடை செய்தார்கள். தற்போதும் இரட்டைக் குடியுரிமை எமக்குத் தேவையில்லை என்பதுதான் எமது கருத்தாக இருக்கிறது. ஆனால், அது ஒருவரை பழிவாங்க அன்றி நாட்டின் இறையாண்மையை கருத்திற்கொண்டு இரட்டை குடியுரிமை தேவையில்லை என்பதே எமது நிலைப்பாடு' என்றார். (ம-இ)

# 20ஆவது திருத்தம் மக்களின் ஆணை!

## ஆதரவு வேண்டும் என்கிறார் பிரதமர்



கொழும்பு, ஒக். 22

**மக்களின் ஆணைக்கு இணங்கவே 20ஆவது திருத்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். எனவே, இதற்கு எதிரணியினரும் ஆதரவை வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.**

20ஆவது திருத்தம் தொடர்பில் பிரதமர் நாடாளுமன்றில் நேற்று தெரிவித்ததாவது:

'இன்று எமக்கு மிகவும் முக்கியமான ஒரு தினமாகவே நாம் கருதுகிறோம். 20ஆவது திருத்தம் என்பது மக்களின் ஆணைக்கு இணங்கவே கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும், அது நீண்டகாலத் தீர்வாக என்றும் அமையாது. புதிய அரசமைப்பை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும். நாம் 20 ஆவது திருத்தத்தை ஜனநாயக ரீதியாகத்தான் கொண்டுவந்துள்ளோம். எனினும் 19ஆவது திருத்தம் அவ்வாறு கொண்டுவரப்படவில்லை.

இதற்கு எதிராக கருத்துக்களை வெளியிட வாய்ப்பளிக்கவில்லை. இதனால் நாடு பலவீனமடைந்தது. 19இன் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. இதனால் ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்றது. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஈஸ்டர் தாக்குதலை முன்கூட்டியே தெரிந்துவைத்திருந்தார்கள் என ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கப்பட்டுள்ளது. அப்படியிருந்தும், இதனை தடுக்க முடியாதமைக்கு 19தான் முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இதனையிட்டு நாம் வெட்கமடையவேண்டும். நாட்டின் பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் இல்லாமல் இருப்பது, நாட்டுக்கு நல்லது அல்ல. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதிக்கு பொலிஸ்மா அதிபரை மாற்றக்கூட அதிகாரம் இல்லை.

இவ்வாறான ஜனாதிபதி முறைமைதான் இன்றும் நாட்டில் இருக்கிறது. நான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்தேன். அந்த அதிகாரம் இருந்த காரணத்தினால்தான் போரை எம்மால் நிறைவுக்குக் கொண்டுவர முடிந்தது.

புலனாய்வுப் பிரிவு உள்ளிட்ட அனைத்து பாதுகாப்புப் பிரிவும் அந்தக் காலத்தில் சக்திமிக்கதாக இருந்தன. ஆனால், இந்த நிலைமைகள் எல்லாம் இன்று மாற்றமடைந்து விட்டன. 19ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்தவர்களே இது நாட்டுக்கு சரியில்லை என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். பொதுத் தேர்தலின்போது, 20 தொடர்பாக நாம் மக்களிடம் ஆணை கோரியிருந்தோம். அதற்கிணங்கவே நாம் தற்போது அதனை கொண்டுவந்துள்ளோம். எனவே, இதனைப் புரிந்துகொண்டு எதிரணியினரும் இதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம்' - என்றார். (ம-இ)

# வடமராட்சி கிழக்கு பகுதியில் விஷமிகளால் கரவலை தீவைப்பு

வடமராட்சி, ஒக். 22

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கில் நேற்றுமுன்தினம் இரவு கரவலை மற்றும் வெளியிணைப்பு இயந்திரம் என்பன தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. நிக்ஸன் என்பவருக்குச் சொந்தமான உடைமைகளே தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

தீக்கிரையாக்கப்பட்ட உடைமைகளின் பெறுமதி சுமார் 10 லட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக வடமராட்சிமீனவர்களின் உடைமைகள் இவ்வாறு மர்ம நபர்களால் அத்துமீறி எரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-160)

# சம்பிக்கவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

2016ஆம் ஆண்டு ராஜகிரிய பகுதியில் ஏற்பட்ட விபத்தில் இளைஞன் ஒருவனை பலத்த காயமடையச் செய்த குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமிக கனேபொல முன்னிலையில் குறித்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம-இ)

# 37 வெற்றிடங்கள் இதுவரை பூர்த்திசெய்யப்படாத நிலை!

## கரைச்சி பிரதேச சபை தவிசாளர் சுட்டிக்காட்டல்

**கிளிநொச்சி, ஒக்டோபர் 22**

**கரைச்சி பிரதேச சபைக்கு தீயணைப்பு பிரிவு ஊழியர்கள் 21 பேர் அடங்கலாக 37 ஆளணி வெற்றிடங்கள் இதுவரை பூர்த்திசெய்யப்படவில்லை எனவும் அதனால் சபையால் முன்னெடுக்கப்படவேண்டிய பல சேவைகளை மக்களுக்கு முன்னெடுக்க முடியாது உள்ளது என்றும் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கரைச்சி பிரதேச சபைக்கான 113 ஆளணியில் 16 வெற்றிடங்கள் நிரபப்படாமல் உள்ளன. அது தவிர்ந்து தீயணைப்பு பிரிவிற்கான 21 ஆளணி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டபோதிலும் அதுவும் வழங்கப்படவில்லை. இதனால் சபையின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் சிரமங்கள் காணப்படுகின்றன. தீயணைப்பு பிரிவுக்கான ஆளணி அடங்கலாக 37 வெற்றிடங்கள் நிரபப்பட வேண்டும். அது இதுவரை இடம்பெறவில்லை. குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக 43 பேர் பகுதிநேரப் பணியாளர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சபை நிதியில் இருந்து 11.5 மில்லியன் ரூபா ஊதியமாக வழங்கப்படுகின்றது.

குறித்த விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர், அமைச்சர்கள், உள்ளூராட்சி ஆணையாளர், தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு ஆகியோருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனினும் இன்றுவரை தீர்வு எட்டப்படவில்லை. கரைச்சி பிரதேச சபைக்கு மட்டுமல்ல வடக்கு மாகாணத்தில் உள்ள 30க்கும் மேற்பட்ட சபைகளுக்கு இந்த நிலைமை உள்ளது.

இதேவேளை ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கடந்த அரசின் காலத்தில் ஆயிரத்து 200 மில்லியன் ரூபா நிதியில் இரண்டாம் தர நகரம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கான ஆய்வறிக்கைகள் உள்ளிட்ட பணிகள் முடிவடைந்து கட்டுமானத்திற்காக தயார் நிலையில் உள்ள நிலையில் அந்த அபிவிருத்தியும் நிறுத்தப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஊடாக இலங்கை அரசுக்கு கடனாக வழங்கப்பட்டு அரசினால் பிரதேச சபைகளிற்கு மானிய அடிப்படையில் குறித்த திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட இருந்தது. இந்த நிலையில் குறித்த திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துரித அபிவிருத்திகளை மேற்கொள்ளும் வகையில் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடும் வேளையில் அதற்கு இவ்வாறான தடைகள் ஏற்படுகின்றமை வருத்தத்துக்கு உரிய விடயமே - என்றார். (ம-இ)

## டெங்கற்ற பிரதேசமாக தென்மராட்சிப் பகுதி

### பிரதேச செயலரின் நடவடிக்கைக்கு தென்மராட்சி மக்கள் பாராட்டு

சாவகச்சேரி, ஒக். 22

தென்மராட்சி பிரதேசத்தை டெங்கு அற்ற பிரதேசமாக மாற்ற பிரதேச செயலர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு அந்தப் பகுதி மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

பட்டதாரி பயிலுநர்களின் உதவியுடன் தென்மராட்சிப் பகுதிகளில் தற்போது தீவிரமான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் டெங்கு பரவுவதற்கு ஏதுநிலை உள்ள இடங்கள் அழிக்கப்படுகின்றன. மீறுவோர் மீது சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதையடுத்தே இந்தத் துரித நடவடிக்கைக்கு மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (ம-9)

## மாணவர்களுக்கு உணவுப்பொருள்

சாவகச்சேரி, ஒக். 22

அல்லாரை மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் பாடசாலைகளில் கற்கும் போசாக்கு குறைந்த மாணவர்களுக்கு ஆறு மாதங்களுக்குரிய போசாக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ள்னர்.

புலம்பெயர் நாடுகள் மற்றும் உள்ளூர் பரோபகாரிகளிடம் உதவிகள் பெற்று போசாக்கு உலர் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்து மாதாந்தம் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக மாணவர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

கொரோனா காலத்தில் பல்வேறு அமைப்புகள் நிதிகளைப் திரட்டி பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி பின்னர் திட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

இதையடுத்து அல்லாரை மாதர் கிராம அபிவிருத்தித் சங்கத்தின் முயற்சியில் இந்த நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## உடைமையில் ஹெரோய்ன்: மட்டுவில் வாசிக்கு சிறை

சாவகச்சேரி, ஒக். 22

ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த மட்டுவில் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் நேற்று மூன்று மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் போதைப் பொருளான ஹெரோய்னை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் நால்வருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கின் விசாரணைகள் நேற்று இடம்பெற்றன. அவர்களில் இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. ஒருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். பிறிதொருவர் ஏற்கனவே இதே குற்றத்தில் ஈடுபட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவருக்கு மூன்று மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (ம-9)

## வீடுகளுக்கு திரும்பினர் 39 பேர்

வவுனியா, ஒக்.22



வவுனியா, பெரியாமடு மற்றும் பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 39 பேர் நேற்று வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். கட்டார் மற்றும் டுபாயில் இருந்து நாடு திரும்பி தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அவர்களின் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்ததை அடுத்து அவர்கள் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-110)

## பி.சி.ஆர். பரிசோதனை 4 லட்சத்தைக் கடந்தது!

கொழும்பு, ஒக்.22



இலங்கையில் இதுவரை 4 இலட்சத்துக்கு மேற்பட்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக நேற்றுமுன்தினம் மட்டும் தொற்று நோயியல் பணியகத்தால் 8 ஆயிரத்து 270 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை 4 இலட்சத்து 6 ஆயிரத்து 466 ஆக உள்ளது. (க-இ)

## தரமற்றபொருள் விற்பனை; நுகர்வோரால் முறைப்பாடு

சாவகச்சேரி, ஒக். 22

உரிய முறையில் பதப்படுத்தாத பப்படம் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளமை குறித்து வரணியைச் சேர்ந்த ஒருவர் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

குறித்த பப்படம் கல்வியங்காட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வரணி வர்த்தக நிலையத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடு தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் மேற்கொள்ளவுள்ளனர். (ம-9)

## வவுனியாவில் இழுத்து மூடப்பட்டன மோட்டார் சைக்கிள் நிலையங்கள்!

வவுனியா. ஒக். 22

மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் ஆகியவற்றின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக வவுனியாவில் பல விற்பனை நிலையங்கள் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

கொரோனாப் பெருந்தொற்றையடுத்து நாடளாவிய ரீதியில் வாகன இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் வாகன விற்பனை நிலையங்கள் பல படிப்படியாகப் பூட்டப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் போதிய மோட்டார் சைக்கள்கள் மற்றும் ஓட்டோக்கள் கையிருப்பில் இல்லாத காரணத்தால் வவுனியாவில் பல விற்பனை நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. (ம-18)

# உக்கும் கழிவுகள் மீள் சுழற்சிக்கு பிரதேச மக்கள் ஆதரவு வேண்டும்

*சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் தெரிவிப்பு*

**கொடிகாமம், ஒக். 22**

**ஜப்பான் சீடா நிறுவனத்தின் 200 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்புடன் யாழ். மாவட்டத்தின் பிரதேச மற்றும் நகர சபைகளில் நடைமுறைப்படுத்தப்படும் "கமசிமா" உக்கும் கழிவுகள் மீள் சுழற்சி திட்டத்துக்கு மக்கள் சரியான முறையில் ஆதரவு வழங்க வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த சபை அமர்வில் கலந்துகொண்ட அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கரவெட்டி பிரதேச சபையின் பொறுப்பில் பருத்தித்துறை நகர சபை மற்றும் பிரதேச சபை, வல்வெட்டித்துறை நகரசபை, வலி. வடக்கு பிரதேச சபை, வலி.கிழக்கு பிரதேச சபை, சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் நகரசபை ஆகிய எட்டு சபைகள் இணைந்து உக்கும் கழிவுப் பொருள்களை இந்த திட்டத்தின் மூலம் உள்வாங்கி அவை பசளை உரமாக மாற்றப்பட்டு விவசாய பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படவுள்ளன.

இதற்கு ஒவ்வொரு சபைகளும் நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் தொன் உக்கும் கழிவுகளை வழங்க வேண்டும். ஆகவே உக்கக்கூடிய கழிவுகளான தென்னோலைகள்,பனையோலைகள் வெட்டப்பட்ட வாழைமரங்கள் போன்ற உக்கும் பொருள்களை முறையாகத் தரம் பிரித்து வீடுகளில் வைத்தால் சாவகச்சேரி பிரதேச சபையினர் நேரடியாக வந்து பெற்றுக்கொள்வர். சபைகள் ஊடாக சேகரிக்கப்படும் உக்கக் கூடிய கழிவுகள், குறித்த செயற்றிட்டத்தின்மூலம் மக்கள் பாவனைக்கு பயன்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட முள்ளிப் பிரதேசத்தில் அமைந்துள்ள மீள் சுழற்சி நிலையத்திலும் நேரடியாகச் சென்று கழிவுப் பொருள்களை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ந-159)



# 'கிராமத்துக்கு ஒரு வீடு' கலந்துரையாடல்

மன்னார், ஒக். 22

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் "கிராமத்துக்கு ஒரு வீடு" தொடர்பான கூட்டம் மன்னார் பதில் மாவட்டச் செயலர் சிவபாலன் குணபாலன் தலைமையில் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட மன்னார் பதில் மாவட்டச் செயலர் கருத்து தெரிவிக்கையில்

கிராமத்திற்கு ஒரு வீடு என்னும் அடிப்படையில் மன்னாரில் 183 வீடுகளைக் கட்டுகின்ற பணியில் ஏற்கனவே 41 வீடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தற்போது இரண்டாம் கட்டமாக 49 வீடுகளைத் தெரிவு செய்யும் பணி தொடர்பான கலந்துரையாடல் நேற்று (நேற்றுமுன்தினம்) நடைபெற்றது. மேலும் அந்த கிராமங்களுக்கான மின்சாரம், நீர் போன்ற வசதிப்படுத்தல்கள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. அத்துடன் வேலை தொடங்கி 60 நாட்களில் குறித்த வீடுகளை கையளிக்க இருக்கின்றோம் என்றார்.

'உங்களுக்கு வீடு நாட்டிற்கு எதிர்காலம்' என்ற வேலைத்திட்டத்துக்கு அமைவாக மன்னார் மாவட்டத்தில் ஒரு கிராம சேவையாளர் பிரிவில் ஒரு வீடு என்ற அடிப்படையில் 183 வீடுகள் அமைக்கப்பட உள்ளன. அதன் அடிப்படையில், இவ்வருடம் 90 வீடுகள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டுக்கு ரூபா 6 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ந-56,213)

# கைக்குண்டுடன் மூவர் கைது

கிளிநொச்சி, ஒக். 22

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய குளம் கட்டைக்காடு பகுதியில் கைக்குண்டுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை கொடுக்கல் வாங்கல் காரணமாக இரு தரப்பினருக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கைகலப்பு காரணமாக மோட்டார் சைக்கிளை ஒரு சாரார் அபகரித்துள்ளனர். இதன்போது பாதிக்கப்பட்டவர் நேற்றுமுன்தினம் ஒரு கைக்குண்டைக் காட்டி மோட்டார் சைக்கிளைத் தரும்படி மிரட்டியுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கைக்குண்டை வைத்திருந்த நபரைக் கைதுசெய்ததுடன், அச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன் மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ந-6)

# அரச அதிபர் தலைமையில் கிளி. விவசாயக்குழுக் கூட்டம்

கிளிநொச்சி, ஒக்.22



கிளிநொச்சி மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த விவசாயக் குழுக் கூட்டத்தில் மாவட்டச் செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் கமநல அபிவிருத்தித் திணைக்கள, நீர்ப்பாசன திணைக்கள, விவசாயத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இக் கூட்டத்தில் மாவட்டத்தில் விவசாயம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டி எழுந்துள்ள பிரச்சனைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. உரிய சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றியதாக சமூக இடைவெளியைப் பேணியவாறு மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. (ந-222)



# ஹயஸ் –ஓட்டோ விபத்து

கிளிநொச்சி, ஒக்.22

முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த ஓட்டோவுடன், எதிரே வந்த ஹயஸ் ரக வாகனம் மோதியதில் ஓட்டோவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 6 .30 மணியளவில் ஏ-9 வீதியில் கிளிநொச்சி ரெலிகொம் தொலைத்தொடர்பு கோபுரத்திற்கு அருகாமையில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

வீதியால் வந்த ஹயஸ் சடுதியாக திரும்ப முற்பட்ட வேளையே ஓட்டோவுடன் மோதியுள்ளது. இவ் விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. (ந)

# சாவ. பிரதேச சபையின் மகுட வாசகம் தெரிவு

கொடிகாமம், ஒக். 22

சாவகச்சேரி பிரதேச சபையின் மகுட வாசகமாக "வளமான தென்மராட்சியின் நிறைவான கிராமங்கள்" எனும் வாக்கியம் மக்களின் அதிகப்படியான விருப்புகளைப் பெற்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்ற சபை அமர்வில் இந்த வாக்கியத்தை மகுட வாசகமாகத் தெரிவு செய்வதென சபை உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

நாட்டிலுள்ள பெருமளவு உள்ளூராட்சி சபைகள் மகுட வாசகம் இன்றி செயற்படுவது குறித்து உள்ளூராட்சி சபையின் சம்மேளனம் உள்ளூராட்சி மன்றங்களின் பொது அமைப்புகளுடன் கலந்துரையாடி மகுடவாசகம் அமைப்பது தொடர்பாக 5 வாக்கியங்களை முன் வைத்து மக்களின் தெரிவுக்கு விட்டிருந்தன. இதனடிப்படையில் மகுடவாசக விருப்புக்கள் மக்களின் விருப்புக்களை முன்வைத்து செப்டம்பர் 11 ஆம் திகதிக்கு முன் பிரதேச சபையில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மேற்குறித்த "வளமான தென்மராட்சியில் நிறைவான கிராமங்கள்" எனும் வாசகம் அதிகளவு விருப்புகளைப் பெற்றதால் சபையால் நேற்று முன்தினம் அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (ந-159,9)



தாய்த்தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில் லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபனின் நாளொரு நற்பணி எனும் திட்டத்தின் ஊடாக, முள்ளியவளை பூதன்வயல் கிராமத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கான உலர் உணவுப் பொதி, வறிய மாணவர்கள் இருவருக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் தென்னங்கன்றுகள் என்பன தாய்த்தமிழ் பேரவையின் பொருளாளர் திருமதி இ.சிவ லோஜினியால் வழங்கப்பட்டன. (ந-222)

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் 15 ஆயிரம் பேருக்குத் தெரியும்

## சி.ஐ.டி. முன்னாள் பணிப்பாளர் அதிர்ச்சித் தகவல்

**கொழும்பு, ஒக்.22**

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை நடத்த சஹ்ரான் ஹாசிம் திட்டமிட்டிருந்தமை தொடர்பில் சுமார் 15 ஆயிரம் பேர் அறிந்திருந்தனர் என்று அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் கடந்த திங்கட்கிழமை சாட்சியமளித்த போதே அவர் இது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 11ஆம் திகதியாகும்போதே இந்த தாக்குதல் தொடர்பில் சுமார் 10 ஆயிரம் பேர் அறிந்திருந்தனர் என அவர் தமது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயத்தைப் பொறுப்புடன் கூறுகின்றீர்களா? என ஆணைக்குழுவின் நீதிபதி இதன்போது வினவியுள்ளார். இதற்கு பதிலளித்த அவர், இது தொடர்பில் மேல் மாகாணத்திலுள்ள சுமார் 8ஆயிரம் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளேன் என பொலிஸ்மா அதிபர் ஏற்கனவே ஆணைக் குழுவில் தெரிவித்தார் எனவும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அடங்கலாக சுமார் 15ஆயிரம் பேர் தாக்குதல் தொடர்பில் அறிந்திருந்தனர் எனவும் நிலந்த ஜயவர்தன கூறியுள்ளார். (வ-இ)

## வாகன விபத்தில் இளைஞன் சாவு

புத்தளம், ஒக்.22

புத்தளம் ஆராச்சிகட்டு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கார் ஒன்றுடன் மோட்டார்சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் சிலாபம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். பத்தலுஓயா பகுதியைச் சேர்ந்த 26 வயதான ஒருவரே உயிரிழந்தவராவார். சடலம் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (வ-இ)

## 2 இலட்சம் குடும்பங்களுக்கு ரூபா ஐந்தாயிரம் நிவாரணம்

கம்பஹா, ஒக்.22

கம்பஹாவில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ள மேலும் 2 இலட்சம் குடும்பங்களுக்கு ஐந்தாயிரம் ரூபா நிவாரணம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக 1,050 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என கம்பஹா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஹன் பிரதீப் வித்தான தெரிவித்துள்ளார். கம்பஹாவில் பாதிக்கப்பட்டுள்ள 72 ஆயிரம் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள 400 மில்லியன் ரூபா நிதியில் 139 மில்லியன் ரூபா மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மீதமுள்ள பணத்தை இன்று மக்களுக்கு வழங்குமாறு கம்பஹா மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். அரச பணியில் இல்லாத அனைத்து குடும்பங்களும் இந்த 5 ஆயிரம் ரூபா நிதி உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## பிளாஸ்ரிக் தடைக்கு அரசு அங்கீகாரம்

கொழும்பு, ஒக்.22

தேர்ந்தெடுக்கப்பட்ட பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தயாரிப்புக்களுக்கு 2021 ஜனவரி முதலாம் திகதி முதல் தடைவிதிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பைக் குறைக்கும் வகையில் 2017 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது.

அதாவது 20 மைக்ரோனுக்குக் குறைவான பொலித்தீன் உற்பத்தி தடை செய்தல், பொலித்தீன்களால் உணவு பொதிசெய்யும் உற்பத்திகளைத் தடை செய்தல், பொலித்தீன்களைத் திறந்த நிலப்பரப்பில் எரியூட்டலைத் தடை செய்தல் போன்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ள பொலித்தீன்களுக்குப் பதிலாக மாற்று வழிகளை ஊக்குவிப்பதற்கு மத்திய

## களுபோவில மருத்துவமனை ஊழியருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.22

களுபோவில மருத்துவமனையின் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது. இதனையடுத்து அவருடன் நெருங்கிப் பழகிய பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்த நபர் களுபோவில மருத்துவமனையின் கொரோனா சிகிச்சை நிலையத்தில் பணியாற்றும் ஊழியர் என்றும் அவர் தெஹிவளை பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## தவறவிடப்பட்ட பணம் உரியவரிடம் ஒப்படைப்பு

வடமராட்சி,ஒக்.22

மயிலத்தனை தொண்டமானாறைச் சேர்ந்த மூதாட்டி ஒருவரால் பஸ்ஸில் தவறவிடப்பட்ட பணம் மீளக் கிடைக்கப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்ஸொன்றில் பயணித்த மூதாட்டியே பணத்தைத் தவறவிட்டுள்ளார்.

நெல்லியடியிலுள்ள வங்கியில் பெற்றுக் கொண்ட ஐம்பதாயிரம் ரூபா , மேலும் அவர் வைத்திருந்த இரண்டாயிரத்து 150 ரூபா உள்ளடங்கிய கைப்பையை அவர் பஸ்ஸில் தவறவிட்டுள்ளார்.

பஸ்ஸிலிருந்து இறங்கிச் சென்றவரிடம், பஸ்ஸில் கடமை புரிந்த சாரதி மற்றும் நடத்துநர் பணத்தை முழுமையாக நேர்மையுடன் கையளித்தனர். தவறவிடப்பட்ட பணம் கிடைத்ததை அடுத்து, அவர்களது நேர்மையை மூதாட்டி பாராட்டியுள்ளார். (க-இ)

## மழையுடனான காலநிலை நிலவும்

கொழும்பு, ஒக்.22



நாட்டின் சில பகுதிகளில் மழையுடனான காலநிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மன்னாரிலிருந்து காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## தென்கொரியப் பிரதமருக்கு இலங்கை பிரதம அழைப்பு

கொழும்பு, ஒக்.22

தென் கொரியாவின் பிரதமர் சுங் சைகியூவை இலங்கைக்கு வருமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். அவருடன் நேற்று காலை தொலைபேசி ஊடாக உரையாடியபோது பிரதமர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இதன் போது, இரு நாடுகளுக்கிடையிலான உறவை மேலும் மேம்படுத்துவதற்கான விருப்பத்தை இரு தலைவர்களும் வெளிப்படுத்தியுள்ளனர். சமீபத்தில் முடிவடைந்த பொதுத்தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச வெற்றி பெற்றமைக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த தென் கொரியாவின் பிரதமர், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இலங்கையுடன் தொடர்ந்து பணியாற்ற விரும்புகிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

கொரோனா நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்த பின், பிரதமர் சுங் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார்.

மேலும் இந்த பேச்சுவார்த்தையின் போது முதலீடு மற்றும் சுற்றுலா ஆகியவை தொடர்பாகவும் இருநாட்டு தலைவர்களும் கலந்துரையாடியுள்ளனர் எனப் பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (வ-இ)

## இன்றைய நாள்

**மேடம்:** புகழும், பாராட்டும் அதிகரிக்கும். நேற்றைய சிரமங்கள் நீங்கும். உடன் பணிபுரியும் நண்பர்களால் பிரச்சினை வரக்கூடும். உங்களுடைய ஆலோசனைகளை மற்றவர்கள் ஏற்பார்கள்..

**இடபம்:** ஆசை வார்த்தைகளை நம்பி ஏமாறாமல் கவனமாக இருக்கவும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் திருப்தியடைவார்கள். அலைச்சலுடன் ஆதாயம் உண்டு. முயற்சி வெல்லும்.

**மிதுனம்** குடும்பத்தினரின் ஒத்துழைப்பு அதிகரிப்பதால் நிம்மதி நிலவும். யாரையும் எதற்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். எதிர்பார்த்த நபரின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும்.

**கடகம்:** பணியாளர்கள் மனதில் மாறுபட்ட யோசனைகள் உதிக்கும். திடீரென்று அறிமுகமாகும் நபரால் பெண்கள் பயனடைவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை மாறாது.

**சிம்மம்:** பிறருக்கு பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள் இன்று அதிகமாக உழைப்பதால் மன நிறைவும் லாபமும் உண்டு. வாகனம் ஓட்டும்போது கவனம் தேவை. கனிவாகப் பழகுங்கள்.

**கன்னி:** வியாபாரத்தில் பணியாளர்களிடம் கடுமை வேண்டாம். இளைஞர்கள் முயற்சி காரணமாக முன்னேறும் நாள். கடந்த காலத்தில் கிடைத்த பாடங்களால் கவனம் கூடும்.

**துலாம்:** பெற்றோரின் ஆதரவு பெருகுவதால் சாதனை செய்வீர்கள். அந்தஸ்து உயரும். உங்கள் ஆலோசனைகள் ஏற்கப்படும். உத்தியோகம் நிமித்தமாக இடமாற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு முன்பைவிட அதிகரிக்கும். முயற்சியால் முன்னேறுவீர்கள். அதிகாரிகள் உதவுவார்கள். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும்.

**தனுசு:** பொது விஷயங்களில் ஈடுபடுவீர்கள். சிறு வருத்தங்கள் உண்டு. நெடுநாளாக பார்க்க நினைத்த பிரபலத்தைச் சந்திப்பீர்கள். நன்மை நிகழும். அனுபவ அறிவால் வெற்றி பெறுவீர்கள்.

**மகரம்:** பணியிடத்திலிருந்து எதிர்பார்த்திருந்த நற்செய்தி வரும். பெண்கள் பிரச்சினைகளை சமாளித்து நிம்மதி காண்பீர்கள். பரபரப்பாக காணப்படுவீர்கள். வீட்டைச் சீர் செய்வீர்கள்.

**கும்பம்:** அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். கலைத்துறையினருக்கு கவனம் தேவை.

**மீனம்:** குடும்பத்தினர் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். ஆனால் அதே நேரத்தில் ஓயாத வேலையும் அலைச்சலும் இருக்கும். சிலருக்கு இடமாற்றம் உத்தியோக மாற்றம் உண்டாகலாம்.

# கடுமையான சுகாதார விதிகளுடன் மீண்டும் நிகழ்வுகளுக்கு அனுமதி

சாவகச்சேரி, ஒக்.22

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள திருமண மண்டபங்களில் மிகவும் கடுமையான நிபந்தனைகளின் மத்தியில் திருமண நிகழ்வுகளை நடத்த சுகாதாரப் பிரிவினர் மீண்டும் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மண்டபம் ஒன்றில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீறும் வகையில் செயற்பட்டதால், அனைத்து திருமண மண்டபங்களிலும் நிகழ்வுகளை நடத்த சுகாதாரப் பகுதியினர் தடைவிதித்தனர்.

இந்த நிலையில் மண்டப உரிமையாளர்கள் மண்டபங்கள் மூடப்பட்டமையால் தமக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்று சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவித்தையடுத்து சுகாதாரப் பிரிவினர் மீண்டும் நிகழ்வுகளை நடத்த அனு மதி வழங்கினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

நிகழ்வில் 100 பேர் மட்டும் கலந்து கொள்ள முடியும். மண்டப உரிமையாளர் டோக்கன்கள் தயாரித்து 100 பேருக்கு வழங்கவேண்டும். மண்டபத்தினுள் சென்ற ஒருவர் வெளியேற விரும்பினால் டோக்கனை வேறொருவருக்கு வழங்கி விட்டு வெளியேறலாம். அவர் எந்தக் காரணம் கொண்டும் மீண்டும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படமாட்டார்.

கொரோனாத் தொற்று விதிமுறைகளை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும், மண்டபத்தினுள் நிற்போர் முகக் கவசம் அணிந்திருந்தல் வேண்டும், சமூக இடைவெளி பேணப்படல் வேண்டும்.

எமது சுகாதாரப் பகுதியினர் பரிசோதனைகள் மேற்கொள்ளும் போது. நிபந்தனைகளை மீறும் வகையில் எவரும் காணப்படின் பங்குபற்றிய அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவார்கள் மண்டபமும் சீல் வைக்கப்படும் என்று அறிவுறுத்தியுள்ளனர். இதேவேளை, வீடு குடிபுகுதல் மற்றும் அந்தியேட்டி நிகழ்வு களில் 50 பேருக்கு உட்பட்டவர்கள் கலந்து கொள்ள சுகாதாரப் பகுதியினர் அனுமதி வழங்கி வருகின்றனர் -என்றனர். (ற-9)



பாலசுந்தரம் - பிரதி தம்பதிகளின் மகள் ஜெசிக்காவின் 12வது பிறந்ததினத்தை முன்னிட்டு, சுசிலன் பவுன்டேசன் நிறுவனத்தினரால் முல்லைத்தீவு பொன்னகர் முன்பள்ளி மாணவர்களுக்கு ரூபா 7,000 பெறுமதியுள்ள கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (நு-222)

## இலங்கை வரவுள்ளார் அமெ. இராஜாங்க செயலர்

கொழும்பு, ஒக்.22

அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ கொழும்பில் நடைபெறவிருக்கும் இருதரப்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சு இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள இரு நாடுகளுக்கிடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தையிலேயே அவர் கலந்துகொள்ளவுள்ளார். (வ-இ)

## கிழக்கு மாகாணத்தில் நியமனங்கள் வழங்கல்


திருகோணமலை, ஒக்.22

கிழக்கு மாகாணத்திற்கான பொது சேவையில் 93 பட்டதாரிகள் மற்றும் 16 தொழில்நுட்ப அதிகாரிகளுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்திலிருந்து 93 பட்டதாரிகள் மற்றும் 16 தொழில்நுட்ப அதிகாரிகள் பொது சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் திருகோணமலை மாகாண தலைமை அலுவலகங்களில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந் நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத்தின் தலைமையில் கடந்த 16ஆம் திகதி காலை திருகோணமலை மாகாண தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், பொதுச் செயலாளர் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (நு-45)



## திருடப்பட்ட பொருள்கள் மீட்பு: பெண் உட்பட இருவர் கைது



வவுனியா, ஒக்.22

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் திருடப்பட்ட 5 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டு இலத்திரனியல் மற்றும் தளபாடப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் பெண் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா ஓமந்தை, நொச்சிமோட்டைப் பகுதியில் உள்ள பண்ணை ஒன்றில் அமைந்திருந்த வீட்டில் இருந்து தொலைக்காட்சி, குளிரூட்டி, அயன், கட்டில், மெத்தை, கண்ணாடி மேசை, கதிரை, மேசை உள்ளிட்ட சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கடந்த ஒரு மாதங்களுக்கு முன்னர் திருடப்பட்டுள்ளன என ஓமந்தை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் ஓமந்தை குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மற்றும் போதை ஒழிப்பு பொலிஸார் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையின்போது குறித்த பொருள்கள் வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டு அவை மீட்கப்பட்டன. அத்துடன், பிக்கப் ரக வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (நு-18)

# மக்கள் பிரச்சினைகள் நேரடியாக ஆராய்வு

வவுனியா,ஒக்.22



வவுனியா வடக்கு சமுர்த்திப் பயனாளிகளை, மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன நேற்றுச் சந்தித்தார். அவர்களது பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்தார்.

யானைகளால் ஏற்படும் பிரச்சினைகள், குடிதண்ணீர் பிரச்சினை, கிரவல் அகழ்வு போன்ற விடயங்களால் தோட்டச் செய்கையாளர்கள் பாதிப்பு உள்ளிட்ட பிரச்சினைகளை விவசாயிகள் மாவட்டச் செயலருக்கு எடுத்துக் கூறினர். மக்களின் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார். சந்திப்பில் 40 குடும்பங்களுக்கு 12 வகையான விதை மற்றும் நாற்றுக்களும் வழங்கப்பட்டன. சமுர்த்திப் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டனர். (க-110)



## வவுனியாவில் மரநடுகை

வவுனியா, ஒக்.22

மருதம் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் இருந்து யாழ் நோக்கிய மரநடுகைத் திட்டம் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மரநடுகைத் திட்டத்துக்கு வர்த்தகர்கள், இயற்கை ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் அனுசரணை வழங்கியுள்ளதுடன், அவற்றை வளர்த்து பராமரிக்கும் பணிகளை மருதம் பசுமை இயக்கம் இரண்டு வருடங்களுக்கு தொடர்ந்து மேற்கொள்ளவுள்ளது. முதற் கட்டமாக 600 மரங்கள் ஏ-9 வீதிக்கரைகளின் இருமருங்கிலும் நடப்படவுள்ளன. (ந-110)

## அதிபர் நியமனம்

கொடிகாமம்,ஒக்.22

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் அதிபராக, சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதி அதிபர் ப.பாலபவன் மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய க.மங்களேஸ்வரன் ஓய்வு பெற்றுச் சென்றமையையடுத்து, அந்த வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

நேர்முகத் தேர்வின் பிரகாரம், புதிய அதிபர் நவம்பர் 2 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.(க-9)



வாசகர் கடிதம்

## வீதியை ஆக்கிரமிக்கும் வாகனங்கள்

கொரோனா வைரஸ் மனித சமூகத்தை மிக வேகமாக அழித்துக் கொண்டிருக்கின்றது. மறுபுறத்தில் வீதி விபத்துக்கள் காரணமாகவும் மனித உயிர்கள் அநியாயமான முறையில் அழிந்து கொண்டிருக்கின்றன.

விபத்துக்கள் ஏற்படலாம் என்பதை முன்கூட்டியே நன்கு தெரிந்து கொண்டும், எமது கவனக் குறைவு காரணமாக விபத்துக்கான காரணங்களை நாம் செயற்கையான முறையில் உருவாக்கி ஏற்படுத்தும் வீதி விபத்துக்களை விபத்துக்கள் என்ற வகையினுள் அடக்க முடியுமா என்பது சந்தேகமே.

இன்று குடாநாட்டில் அடிக்கடி நடைபெறும் வீதி விபத்துக்களுக்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும், எம்மவர் சிலரின் எதேச்சதிகாரப் போக்குக் காரணமாகும்.

தமது வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள வீதியில் ஆடு, மாடு போன்ற கால்நடைகளை கட்டி மழைகாலத்தில் மேயவிடுதல், வீதியில் மணல், கல் போன்றவற்றை குவித்து வைத்திருத்தல் போன்ற பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாகவும், வீதிகள் மேலும் ஒடுக்கப்பட்டு வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இதேபோன்று கோப்பாய் வடக்கில் கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலய முன் ஒழுங்கைக்கு அருகில் மானிப்பாய் வீதியின் இரு பக்கங்களிலும் பல முச்சக்கர வண்டிகள் தரித்து நின்று வீதியை ஒடுக்குவதால், வீதியால் பயணிப்போர் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குவதுடன் வீதி விபத்துக்களும் அடிக்கடி ஏற்படுகின்றன.

இதற்கு அருகில் உள்ள முச்சக்கர வண்டி திருத்தும் நிலையத்துக்கு வரும் முச்சக்கர வண்டிகளே, மானிப்பாய் வீதியின் இருபக்கமும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அதாவது அன்றாடம் பெரும்பாலான கனரக வாகனங்கள் பயணிக்கும் மானிப்பாய் வீதியை ஆக்கிரமித்து முச்சக்கர வண்டிகள் தரிப்பிடம் அமைந்திருப்பது மிகவும் ஆபத்தான நிலை ஆகும். பொறுப்பானவர்கள் கவனிப்பார்களா?

*சீ.ஜீவராஜா, உரும்பிராய் கிழக்கு*

## பின்பற்றாதே முன்னேறு!



சுகி.சிவம்

புத்தகங்கள் படிப்பதால் மட்டும் ஒருவர் அறிவாளி ஆகிவிட முடியுமா? முடியாது. முடியவே முடியாது. அறிவு என்பது புத்தகத்திலிருந்து ஒருவருக்கு வருவதா? கிடையாது. கிடையவே கிடையாது. புத்தகங்கள் படிப்பது என்பது மணற்கேணியைத் தோண்டுகிற மாதிரி. அறிவு பிறப்பது என்பது மணல் கேணியில் தண்ணீர் ஊறுகிற மாதிரி. மண்ணைத் தோண்டுவதால் மட்டுமே தண்ணீர் வந்து விடாது. மண்ணின் மார்பகத்தில் நீரூற்று இருந்தால் மட்டுமே நீர் சுரக்க முடியும்.

அதனால்தான் நிறைய புத்தகங்கள் படித்தும், மனப்பாடம் செய்தும் பலர் அறிவாளிகளாக ஆகாமலேயே செத்துப் போகிறார்கள். அவர்கள் சுயமாகச் சிந்திப்பதே இல்லை. தோண்டுவதால் மட்டுமே தண்ணீர் வந்துவிடுமா? பாலைவனங்களிலும் பாறை நிலங்களிலும் பல நூறு அடி தோண்டியும் தண்ணீர் வருவதே இல்லை. ஏன்? ஆனால் ஆற்றங்கரையிலும் கடற்கரையிலும் ஐந்தடியிலேயே தண்ணீர் வருகிறது.

ஏன்? பலநூறு தடவை பல நூறு புத்தகங்கள் படித்தும் சிலர் அறிவாளி ஆவதே இல்லை !

ஒரு புத்தகத்தை ஒரு தடவை படித்தாலும் சிலர் அதன் அடி ஆழத்தை உணருகிறார்கள். எந்தப் புத்தகத்தைக் கையில் எடுத்தாலும் இந்த உணர்வோடு எடுங்கள். வெற்றி நிச்சயம். திருக்குறள் படிக்கிறபோது இந்த உண்மையை நான் உணர்ந்து கொண்டேன். 'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு' என்பது தமிழ் மறை. 'அறிவு புத்தகத்திலிருந்து வருவதில்லை. அது கற்பவன் மனத்தகத்தில் இருந்து வருகிறது' என்று உணர வேண்டும். 'தாய் சொல்லைத் தட்டாதே' என்று புத்தகத்தில் உள்ளது. வரதட்சிணை கேட்கச் சொல்கிறாள் தாய். தாய் சொல்லைக் கேட்கிறவன் மூடன். மறுக்கிற மகன்தான் அறிவாளி. 'மருமகளை மதிக்காதே... மண்ணெண்ணெயை ஊற்று' என்கிறாள் தாய்! தாய்மையே அன்பு... அன்பே தாய்மை. அன்பே இன்றி ஒரு பெண்ணை அழிக்க நினைக்கும் தாய், தாயே இல்லை என்று அறிவது நுட்பமான அறிவு. பெரியோரை அவமதிப்பது அயோக்கியத்தனம். அதற்காகப் பெரியோர் சொல்கிற எல்லாமே சரி... சரி என்பது அசட்டுத்தனம். அயோக்கியனாக இருப்பது தவறு என்றால்... அசடாக இருப்பதுவும் தவறுதான். சுயம்... சுயம்... சுயம். இந்த விழிப்பு நிலையோடு எப்போதும் இருக்கப் பழகுங்கள். வெற்றி நிச்சயம். இன்றைக்கு உலகின் பெரும் பிரச்சினை என்ன? மதவெறி. என்ன காரணம்? தங்கள் மத நூல்களில் சொல்லப்பட்ட எல்லாமே சரி... என்கிற அசட்டுத்தனம். அதே சமயம் பிற மத நூல்களில் சொல்லப்பட்ட எல்லாமே பிழை என்கிற அயோக்கியத்தனம். அசட்டுத்தனமும் வேண்டாம்... அயோக்கியத்தனமும் வேண்டாம். சுயமாகச் சிந்திக்கப் பழகு. இந்த உலகத்தில் எல்லாமே விசாரணைக்குட்பட்டவை! விவாதத்துக்குட்பட்டவை.

எவ்வளவு பெரிய மனிதன் என்றாலும் ஏன் கடவுளே என்றாலும் கூட விமர்சனத்துக்குரியவர் ஆராய்ச்சிக்குரியவர். இதுதான் விவேகமான, விழிப்பான நிலை. 'எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும்...' என்கிற குறளில், யார் யார் என்றால் என்ன பொருள்? அதில் திருவள்ளுவர் அடங்கமாட்டாரா? திருவள்ளுவரே சொன்னாலும் அப்படியே ஏற்பது கூடாது.

தனக்கு ஆமாம் போடும் கூட்டத்தைவிடத் தன்னை விழிப்புடன் விமர்சிப்பவனைத்தான் திருவள்ளுவர் விரும்புவார். காரணம் தன்னைப் பின்பற்றுபவனைவிடத் தன்னையும் தாண்டி முன்னால் போகிறவனையே திருவள்ளுவர் தேடுகிறார். ஆதாரம் சொல்லட்டுமா? 'தம்மின் தம்மக்கள் அறிவுடைமை' என்ற குறளுக்கு என்ன பொருள்? தம்மையும் தாண்டி அடுத்த தலைமுறை வளருவதையே வள்ளுவர் விரும்புகிறார். 'திருக்குறளில் என்ன இருக்கிறது! எதுவுமே இல்லை' என்பது அயோக்கியத்தனம். 'அதில் எல்லாமே இருக்கிறது... அதைத் தாண்டி எதுவுமே இருக்க முடியாது' என்பது படு அசட்டுத்தனம். 'பரிமேலழகரும் மணக்குடவரும் என்ன உரை எழுதிக் கிழித்தார்கள்' என்று பேசினால் அயோக்கியத்தனம்! 'பரிமேலழகரும் மணக்குடவரும் சொல்வது மட்டும்தான் சரி... மற்ற எவனுக்கும் எதைச் சொல்லவும் உரிமை இல்லை' என்று எண்ணுவது அகில உலக அசட்டுத்தனம். புத்தகங்களைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு சுயமாகச் சிந்திக்க மறுக்கும் மூடத்தனமே எல்லாக் குழப்பங்களுக்கும் காரணம். உண்மையைத் தேடும் நெருப்போடு நான் வள்ளுவரின் தாள்களை வணங்கினேன். வாரி எடுத்து இந்தப் பிள்ளையைத் தோள்களில் அமர்த்தினான் என் பாட்டன். பாசத்தின் பரிசு அது. அவனது தயவால் அவனைவிட அதிக தூரத்தை என்னால் பார்க்க முடிகிறது! நான் அசடுமல்ல... அயோக்கியனுமல்ல... வள்ளுவரால் ஆசீர்வதிக்கப்பட்டவன். அதனால் தமிழினத்தை உயர்த்தும் எனது போர் ஓயாது

# பி.சி.ஆர்.பரிசோதனைகள் அதிகரிக்கப்பட வேண்டும்

## மருத்துவர் யமுனாநந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.22

நாட்டில் கொரோனா பரம்பலைக் கட்டுப்படுத்த, அதிகளவில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொரோனாத் தொற்று ஒரு பூகோள பரம்பல் தொற்றுநோயாகும். இதன் தொற்று வீதம் சாதாரண தொற்று நோய்களை விட மிகவும் அதிகமாகவுள்ளது. இந்தப் பரம்பலைக் கட்டுப்படுத்த நோயாளிகளை அடையாளப்படுத்தி, அவர்களை தனிமைப்படுத்தல் அவசியமானது. இதற்கு பி.சி.ஆர். பரிசோதனை உதவுகின்றது நோய்த் தொற்றைக் கண்டறியும் பி.சி.ஆர். பரிசோதனை வீதத்தை அதிகரித்தால் மாத்திரமே, நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும். இதற்கு நோய் பரவுகின்ற திசையைக் கண்டறிந்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

கொரோனாத் தொற்று எண்ணிக்கை 10 மடங்காக அதிகரிக்கும்போது, பரிசோதனைகளை இன்னும் இரு மடங்காக அதிகரிக்க வேண்டும்

இலங்கையில் பி.சி.ஆர். ஆய்வுகூடங்கள் மேலும் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட வேண்டும்.

எனினும் தொற்று ஏற்படாவண்ணம் கட்டாயமாக நாம் அனைவரும் முகக் கவசம் அணிய வேண்டும். கைகளை கிருமித் தொற்று நீக்கிகளைப் பாவித்து நன்றாகக் கழுவ வேண்டும். பொது இடங்களில் தனியாள் இடைவெளி பேணுதல் வேண்டும். பொதுப் போக்குவரத்தை இயன்றவரை தவிர்த்தல் வேண்டும். அவசியமற்ற ஒன்று கூடல்களைத் தவிர்த்தல் வேண்டும்.

இவற்றைக் கடைபிடிப்பதன் மூலம், தொற்று ஏற்படுவதைக் குறைக்க முடியும். இன்னும் 20 வருடங்களுக்கு கொரோனா நோய்க்கிருமி எமது சமூகத்தில் காணப்படும். எனவே இந்த விடயங்களை மக்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.- என்றார். (க-111)

காங்கேசன்துறை-கொழும்பு

## ரயில் சேவைகளுக்கான அட்டவணை வெளியீடு



யாழ்ப்பாணம்,ஒக்.22

காங்கேசன்துறையிலிருந்து காலை 3.45 மணிக்கு புறப்படும் ஸ்ரீதேவி தொடர்ந்து ஏழு நாள்களும் சேவையில் ஈடுபடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நகர்சேர் கடுகதி ரயில் சேவைகள் நேற்றிலிருந்து வார நாள்களில் ஒரு சில நாள்களில் மட்டும் தற்காலிகமாக இடை நிறுத்தப்படும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

உத்தரதேவி (4018) வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் சேவையில் ஈடுபடாது. சனி, ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய தினங்களில் சேவையில் ஈடுபடும் .

(4022) குளிரூட்டி ரயில் கிழமை நாள்களில் சேவையில் ஈடுபடாது. சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் சேவையில் ஈடுபடும்.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை சேவையில் ஈடுபடும் (4021) குளிரூட்டி ரயில் திங்கள், செவ்வாய், புதன் வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் சேவையில் ஈடுபடாது. சனி ஞாயிறு நாள்களில் மட்டும் சேவையில் ஈடுபடும்.

உத்தரதேவி (4017) மற்றும் ஸ்ரீதேவி (4003) ஆகிய ரயில்கள் திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் சேவையில் ஈடுபடாது. வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் சேவையில் ஈடுபடும்.

சகல நகர்சேர் கடுகதி ரயில்களும் குறிப்பிட்ட வார நாள்களில் மட்டும் மீள அறிவிக்கும் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளன. சனி, ஞாயிறு தினங்களில் சேவையில் ஈடுபடும்.

எதிர்வரும் 29,30,31 மற்றும் 1/11/2020 ஆகிய நாள்களில் மேற்குறித்த ரயில்கள் சேவைகள் வழமைக்குத் திரும்பும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-159)

வவுனியா மாவட்டத்தில்

# 13,750 ஏக்கரில் உழுந்துச்செய்கை



வவுனியா,ஒக்.22

**வவுனியா மாவட்டத்தில் 13 ஆயிரத்து 750 ஏக்கரில் உழுந்துச் செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.**

மாவட்ட மட்ட உழுந்துச் செய்கை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் ஆலோசனைக்கு அமைவாக வவுனியா மாவட்டத்தில் அதிகளவில் உழுந்துச் செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான உதவிகளையும், ஆலோசனைகளையும் எமது திணைக்களம் மற்றும் விவசாயத் திணைக்களம் என்பன வழங்கி வருகின்றன.

இம்முறை எமது மாவட்டத்தில் காலபோகத்தில் 13 ஆயிரத்து 750 ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்துச் செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே உழுந்துச் செய்கை தொடர்பில் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும். உழுந்துச் செய்கையில் பாதிப்புக்கள் ஏற்படின் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில், இழப்பீடு வழங்குவதற்கும், விவசாயக் காப்புறுதிச் சபை ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக ஒரு ஏக்கருக்கு 2 ஆயிரத்து 250 ரூபா பணத்தைச் செலுத்தி காப்புறுதி செய்தால், உழுந்துச் செய்கைக்கு அறுவடை நேரத்தில் பாதிப்பு ஏற்படுத்தும் இடத்து ஏக்கர் ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபா பணத்தை விவசாயிகள் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் உத்தரவாத விலையில் எமது திணைக்களம் உழுந்தைக் கொள்வனவு செய்யும். குறைந்த பட்சம் ஒரு கிலோ உழுந்து 220 ரூபாவுக்கு குறையாத வகையில் கொள்வனவு செய்யப்படும். வவுனியாவில் செய்கை பண்ணப்படும் உழுந்தைக் கொள்வனவு செய்வதற்கு பல்வேறு நிறுவனங்கள் [illegible]ம்முடன் தொடர்பை ஏற்படுத்தி [illegible]சி வருகின்றன.

எனவே உழுந்துப் பயிர்ச் செய்[illegible]க ஊடாக, விவசாயிகள் நன்[illegible]ம அடையக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. விவசாயிகள் அச்சமின்றி செய்கையில் ஆர்வம் காட்டுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.-என்றார். (க-18)



## குடமுருட்டி பாலத்தின் வேகத்தடை நீக்கம்

கிளிநொச்சி,ஒக்.22

பூநகரி-பரந்தன் வீதியில் அமைந்துள்ள குடமுருட்டி பாலத்துக்கு, இருபக்கமும் போடப்பட்டிருந்த வேகத்தடை நேற்று அகற்றப்பட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு, விஷமிகள் குடமுருட்டி பாலத்தின் இரும்புகளைத் திருடிச் சென்றிருந்தனர்.

அதனால் பாலம் உறுதிப்பாட்டை இழந்தது. பயணிக்கும் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பாலத்தின் இரு கரையிலும் வேகக் கட்டுப்பாட்டுத் தடை போடப்பட்டது.

தற்போது பாலம் பூரணமாகச் சீர் செய்யப்பட்டுள்ளதால், வேகக் கட்டுப்பாட்டுத் தடை, வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் அகற்றப்பட்டுள்ளது. (க-ரி1)





உலக புள்ளிவிவர தினத்தையொட்டி யாழ்ப்[illegible] மாவட்டச் செயலக புள்ளிவிவர அலுவலகத்[illegible] வெளியிடப்பட்ட புள்ளிவிவரத் தொகுப்பு, யாழ் [illegible]டச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் கையளி[illegible] பட்டது. (ப-[illegible])

# '20'
## ஆளும் கட்சிக்குள் வெடிக்கும் மோதல்

### விமலுடன் முரண்பட்ட பஸிலின் சகா

கொழும்பு,ஒக்.22
தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கும், ஆளுங்கட்சி எம்.பி. ஜயந்த கெட்டகொடவுக்குமிடையில், நாடாளுமன்ற வளாகத்தில், கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவிலுள்ள 'இரட்டைக்குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றம் வர முடியும்' என்ற சரத்தை நீக்குமாறு அரசுக்கு தேசிய சுதந்திர முன்னணி கடும் அழுத்தம் கொடுத்து வருகின்றது.

இந்த நிலையில் 20 க்கு ஆதரவாக வாக்களிக்குமாறு, தேசிய சுதந்திர முன்னணியின் எம்.பிக்களுக்கு, பஸில் ராஜபக்சவுக்கு மிகவும் நெருக்கமான தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட ஜயந்த கெட்டகொட அழுத்தம் கொடுத்துள்ளார். பேரமும் பேசியுள்ளார்.

இது தொடர்பில் கட்சி உறுப்பினர்கள் தலைவர் விமல்வீரவன்சவுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். இதனையடுத்து ஜயந்த கெட்டகொடவுக்கு எதிராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் விமல்வீரவன்ஸ முறைப்பாடு செய்துள்ளார்.

வரும்வழியில் ஜயந்தகெட்டகொடவை கண்டபோதே இருவருக்குமிடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இருவரும் முஷ்டியை முறுக்கிக்கொண்டு முன்பாய்ந்தவேளை, ஏனைய சில உறுப்பினர்கள் தடுத்துவிட்டனர் என்று இணைய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதேவேளை, இந்த விவகாரம் தொடர்பில் துஷார இந்துனில், நேற்றுச் சபையில் உரையாற்றும் போது கருத்து வெளியிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-44)

# தபாலகத்தின் அசமந்தத்தால் அலுவலர்களுக்கு அசௌகரியம்

### கரவெட்டியில் இந்த நிலைமை

யாழ்ப்பாணம், ஒக்.22
**கரவெட்டி தபாலகத்துக்கு உட்பட்ட உப அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக அனுப்பப்படும் "ரெலி மெயில்" உரிய இடங்களுக்குச் செல்வதில் தாமதம் ஏற்படுவதால் நிர்வாக நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது என்று அரச அலுவலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அரச அலுவலர்கள் தங்களது விடுமுறை உட்பட முக்கிய விடயங்களை "ரெலி மெயில்" ஊடாகத் தங்கள் அலுவலகங்களுக்கு அறிவிப்பது வழமை. அவ்வாறு அனுப்பப்படும் "ரெலி மெயில்கள்" உரிய இடங்களுக்கு, உரிய நேரத்தில் சென்றடைவதில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் கரணவாய் உப தபாலகத்தின் ஊடாக அரச அலுவலர்கள் தங்கள் அலுவலகத்துக்கு அனுப்பிய "ரெலி மெயில்கள்" நேற்றுவரை உரிய இடங்களுக்குச் சென்றடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தங்கள் விடுமுறைகள் தொடர்பாகத் தங்களால் அனுப்பப்பட்ட "ரெலி மெயில்கள்" இன்னமும் உரிய இடங்களுக்குச் சென்றடையாத நிலையில், அறிவிக்காது விடுமுறை எடுத்தமைக்காக அதிகாரிகள் அனுப்பிய விளக்கம் கோரும் கடிதங்கள் சாதாரணத் தபால் ஊடாக வீடுகளுக்கு வந்துள்ளன என்று அரச அலுவலர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக கரவெட்டி தபால் அதிபரிடம் வினவியபோது, எம்மிடம் ஒரே ஒரு கணினி மட்டுமே உள்ளது. அதிகளவானோர் "ரெலி மெயில்" அனுப்பவரும்போது இந்தத் தாமதம் ஏற்படுகின்றது. சிறிது தாமதித்தாலும் உரிய இடங்களுக்கு "ரெலி மெயில்" அனுப்புகின்றோம் என்று தெரிவித்தார்.

இவ்வாறான தாமதங்கள் ஏற்படுமாயின் தங்களுக்கு முன்னரே தெரிவித்திருக்க வேண்டும். இவ்வாறான தாமதங்களால் நிர்வாக நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட அரச அலுவலர்கள் கோரியுள்ளனர். (எ)

# மத அனுஷ்டானங்களை சரிவரப் பின்பற்றுங்கள்!

### பிரதமர் மஹிந்த ஆலோசனை

கொழும்பு,ஒக்.22
ஆன்மீகத் துறையிலும், நற்பண்பிலும் மேம்பட வேண்டுமாயின், அனைத்துப் பிரஜைகளும் மத அனுஷ்டானங்களைச் சரிவரப் பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



பிரதமர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் அலரி மாளிகையில் இடம்பெற்ற நவராத்திரி விழாவில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'நாட்டைக் கட்டியெழுப்பும் 'சுபீட்சத்தின் நோக்கு' என்ற பயணத்தை நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஆரம்பித்திருக்கின்றோம். சட்டத்தை மதிக்கும் குணநலம் கொண்ட ஒழுக்கநெறியான சமூகத்தை நாம் அனைவரும் ஒன்றிணைந்து உருவாக்க வேண்டும். மக்களுக்குத் தமது மத அனுஷ்டானங்களைப் பின்பற்றுவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான இக்கட்டான சந்தர்ப்பத்திலும் இந்து ஆலயங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வழங்கி, சமய விழுமியங்களைப் பாதுகாப்பதற்கு முன்வந்துள்ளோம் என்று பிரதமர் குறிப்பிட்டார். -என்றுள்ளது. (க-இ)

## மகிழ்ச்சியில் விவசாயிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.22
யாழ். குடாநாட்டில் நேற்றுப் பரவலாக பெய்த கனத்த மழையை அடுத்து, நெற்பயிர்கள் குளிர்ச்சியடைந்தன. வறட்சியின் பிடியில் இருந்து ஒருவாறு தப்பித்துக் கொண்டதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

பெரும்போக நெற்செய்கைக்காக ஏற்கனவே விவசாயிகள் தமது வயல்களில் நெல்லை விதைப்புச் செய்தனர்.

மழையின்மையால் நெற்பயிர்கள் சோர்ந்து வாடிக் காணப்பட்டன. வயல்களில் கிணறு வசதி கொண்ட விவசாயிகள், அவற்றுக்கு நீரை இறைத்து அவற்றை தப்ப வைத்தனர்.

ஏனைய வயல்களில் காணப்பட்ட நெற்பயிர்கள் மழையின்றி சோர்ந்து காணப்பட்டன. திடீரென பரவலாக நேற்றுக் கொட்டிய மழையால் பயிர்கள் குளிர்ச்சியடைந்தன. மழை இன்றி ஏங்கித் தவித்த விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர். (க-17)

## கூட்டுறவாளருக்கு பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.22
கூட்டுறவுப் பணியாளர்களுக்கான தராதரப்பத்திர உயர்பிரிவு பயிற்சி நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

கூட்டுறவு சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் பிரதிநிதி மற்றும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோர் பயிற்சிகளை ஆரம்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கருத்துரை வழங்கினார்.

தொடர்ந்து பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. (க-17)

## தனிமைப்படுத்தல் முடித்த 24 பேருக்கு கொரோனா

கொக்கல சுற்றுலா விடுதியில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தும் முகாமில், தனிமைப்படுத்தல் காலம் முடிந்து வீடு திரும்பவிருந்த 24 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

இவர்கள் கொழும்பு ஐ.டி.எச். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

24 பேரும் தனிமைப்படுத்தலில் 14 நாள்கள் முகாமில் தங்கயிருந்தனர். இரண்டாவது பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## நாடளாவிய ரீதியில் மர நடுகைத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.22
வளர்ந்து வரும் நாட்டுக்கு வளரும் ஒரு மரம் எனும் தேசிய எண்ணக்கருவின் கீழ், துருலிய லங்கா தேசிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் நாடுதழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல அதற்கான துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளர் பாலித்த பர்ணாந்து அறிவித்துள்ளார்.

மேலும் நடப்பட்ட மரங்களின் அபிவிருத்தி தொடர்பில் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் கண்காணிப்புக்களை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-50)

# ‘20’க்கு ஆதரவளித்தால் பின்னால் வருந்துவீர்கள்!

## குமார வெல்கம எச்சரிக்கை

**கொழும்பு,ஒக்.22**

**அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு பயங்கரமானதாகும். எனவே, அதற்கு ஆதரவாக உறுப்பினர்கள் வாக்களிக்கக்கூடாது, அவ்வாறு வாக்களித்தால் எதிர்காலத்தில் வருந்தவேண்டிய நிலை ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்த அரசு ஆட்சிக்குவந்துஓராண்டுதான் ஆகின்றது. எனவே, அரசுக்கும், ஜனாதிபதிக்கும் பதவிக் காலம் முடிவடைவதற்கு மேலும் சிலவருடங்கள் உள்ளன. அதற்கு முன்னர் ஆட்சி கவிழ்வதற்கான சாத்தியம் இல்லை.

எனவே, விரிவானதொரு கலந்துரையாடலின் பின்னர் நாட்டுக்குப் பொருத்தமானதொரு அரசமைப்பை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். அதனை விடுத்து எதற்காக அவசர, அவசரமாக ‘20’ஆவது திருத்தச்சட்ட வரைவு கொண்டு வரப்படுகின்றது? எமது கட்சியின் தலைவிக்கு அநீதி இழைக்கப்பட்டதாலேயே ஜே.ஆரின் அரசமைப்பை அன்று எதிர்த்தோம். ‘20’ இலும் எதேச்சாதிகாரம் இருக்கின்றது.

இந்தச் சட்ட வரைவு பயங்கரமானது. எனவே அதற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டாம் என்று சிரேஷ்ட உறுப்பினர் என்ற வகையில் உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். 18 ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு அன்று வாக்களித்ததற்காக டியூ குணசேகர இன்று மன்னிப்புக் கோருகின்றார். எனவே, 20 க்கு ஆதரவாக வாக்களிப்பவர்கள் எதிர்காலத்தில் வருந்தக்கூடும்.

அதேவேளை, அரசமைப்பின் ‘19’ ஆவது திருத்தச்சட்ட வரைவை நாம் எதிர்த்தோம். எனினும், மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்பதால் அவர் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் அச்சட்ட வரைவை ஆதரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது." -என்றார். (க-44)



## வீதி சீரமைப்பு

தொல்புரம், ஒக்.22

நீண்ட காலமாக சீரமைக்கப்பட்டாதிருந்த வழக்கம்பரை பாணாவெட்டி வீதி, வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் சீரமைப்புச் செய்யப்படுகிறது.

வலிகாமம், மேற்கு பிரதேசத்தில், தொல்புரம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்துக்கு முன்னால் இருந்து ஆரம்பமாகி, தொல்புரம் மத்தி, பாணாவெட்டி வைத்திய சாலைவரை. செல்லும் வீதி நீண்ட காலமாகக் குண்டும் குழியுமாக இருந்தது. ஊர் மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகபிரதேசசபை உறுப்பினர் ச.ஜெயந்தன், தவிசாளர் ஆ.நடனேந்திரன்ஆகியோரின் முயற்சியால் வீதி அபிவிருத்தி திணைக்களம் அந்த வீதியைச்சீரமைப்புச் செய்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. இவ்வீதி 21 இலட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்படுகிறது. (ப-63)

## பொது இடங்களில் தொற்று நீக்கல்

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ்.மாநகரத்தில்பொது இடங்களில் தொற்று நீக்கி மருந்து விசிறும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் ஒன்றுகூடும் இடங்களை இலக்கு வைத்து தொற்று நீக்கி மருந்து விசிறப்பட்டு வருகின்றது.

பஸ்தரிப்பு நிலையம், சந்தைகள், உயர்தரப் பரீட்சை நடைபெறும் பரீட்சை நிலையங்கள் உள்ளிட்டவை தொற்று நீக்கம் செய்யப்பட்டு வருகின்றன. (க-17)

## ‘20’ ஐத் தோற்கடிக்க இடமளிக்க மாட்டோம்

### சுதந்திரக் கட்சி திட்டவட்டம்

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவைத் தோற்கடிப்பதற்கு இடமளிக்கமாட்டோம். அதற்கு ஆதரவு வழங்குவோம். திருத்தங்களும் முன்வைக்கப்படும்." என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது ‘20’ ஐ ஆதரிக்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய செயற்குழுக்கூட்டத்தின் பின்னர் சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர், அபயராம விகாரைக்குச் சென்று முருத்தெட்டுவே ஆனந்த தேரரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட தயாசிறி ஜயசேகர, "இந்த ஆட்சியை உருவாவதற்குப் பாடுபட்ட தேரர்களைச் சந்தித்தோம். 20 தொடர்பில் கலந்துரையாடினோம். அதனைத் தோற்கடிக்க வைப்பதற்கு இடமளிக்க முடியாது. அதேபோல் நாளை (இன்று) வரை அவகாசம் உள்ளது. திருத்தங்கள் சில வற்றை முன்வைத்துள்ளோம்." என்றார். (க-44)

## தனங்களப்பு வீதிக்கு விடிவு

சாவகச்சேரி,ஒக்.22

தென்மராட்சி தெற்கு பிரதேச மக்களின் நீண்ட நாள் கோரிக்கை தற்போது நிறைவேற்றப்படுகிறது.

சாவகச்சேரியில் ஏ-9 வீதியில் ஆரம்பித்து ஏ32வீதியுடன்இணையும் தனங்களப்பு வீதி, தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையால் செப்பனிடப்பட்டு வருகிறது.

போர்க்காலத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்த வீதி ஊடாக மன்னார், கிளிநொச்சி போன்ற தூர இடங்களுக்குச் செல்லும் பஸ்கள் உட்பட கனரக வாகனங்களும் பயணிக்கின்றன.

வீதியைப் புனரமைத்து வழங்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் பல தடவைகள் கோரிய போதும், வருடாவருடம் சிறு சிறு புனரமைப்பு வேலைகளே இடம்பெற்றன.

தற்போது வீதியின் இரு புறமும் தலா ஒவ்வொரு அடிதூரம் அகற்றப்பட்டு, தார்க்கலவை வீதியாக அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (க-9)

## வீட்டுத் திட்டத்துக்கு தெரிவுக்குழு தெரிவு

மன்னார்,ஒக்.22

நானாட்டானில் ஆறு லட்சம் வீட்டுத் திட்டத்துக்கான தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால், கிராமத்துக்கு ஒரு வீடு என்னும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதனைச் செயற்படுத்தவும் அந்த வீட்டுத்திட்டத்துக்கு உரிய பயனாளிகளைக் கண்டறியவும் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குழுவில் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச சபையின் அரசியல் பிரமுகர்கள், மற்றும் சமூக மட்ட அமைப்புகளின் தலைவர்களும் அங்கம் வகிக்கின்றனர். (க-213)

## நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் 3,622 இடங்களில் பரிசோதனை

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில், தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தின் போது, மூவாயிரத்து 622 இடங்கள்சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்த நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகி 20 ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்பட்டது.

நுளம்பு ஒழிப்பு நடவடிக்கையின்போது, 22 இடங்களில் நுளம்புக் குடம்பிகள் இனம் காணப்பட்டன.

140 வரையிலான இடங்கள் போதிய சுகாதார வசதிகள் இன்றிக் காணப்பட்டன. அந்த இடங்களை உடனடியாகத் துப்புரவு செய்யுமாறு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டது.

அத்துடன் வட்டார ரீதியாக பிளாஸ்ரிக் கழிவுப் பொருள்களும் அகற்றப்பட்டன.

கூடுதலான நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாகக் காணப்பட்ட பொருள்களைச் சேகரித்து குடியிருப்பாளர்கள் பொதியாக்கி கழிவகற்றும் பிரிவினரிடம் ஒப்படைத்தனர். நுளம்பு ஒழிப்பு நடவடிக்கையில் மாநகர பொது சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரத் தொண்டர்கள், பொலிஸார், கிராம உத்தியோகத்தர்கள், பொது அமைப்பினர் உட்பட பலர் இணைந்து கொண்டனர். (க-17)

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் நிரந்தர பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலைநாட்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10/-ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் "தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு 05.11.2020 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

(1) பதவி: காசாளர் (நிரந்தரம்)
சம்பள குறி இல: 306/12
சம்பளத்திட்டம்: 04/2018 இன் படி 16780 – 150 x 10 – 165 x 10 - 19930

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

(அ) கூட்டுறவு ஊழியர் 13வது சம்பளத்திட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத்திட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது நான்கு (04) ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

(ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரம் அல்லது க.பொ.த. உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவுச் சங்கமொன்றில் காசாளர் அல்லது விற்பனை தொடர்பான பதவியொன்றில் ஆகக் குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

(இ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரம் அல்லது க.பொ.த. சாதாரணதரம் அல்லது தே.க.பொ.த பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது கணிதம் உடன் சிங்களம் அல்லது தமிழ் மொழி என்பவற்றை உள்ளடக்கி 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவுச் சங்கமொன்றில் காசாளர் அல்லது விற்பனை தொடர்பான பதவியொன்றில் ஆகக் குறைந்தது நான்கு (04) ஆண்டு கால அனுபவம்.

(2) பதவி: எழுதுநர் (நிரந்தரம்)
சம்பள குறி இல: 302/15
சம்பளத்திட்டம்: 04/2018 இன் படி 15545 – 130 x 10 – 140 x 10 - 18245

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

(ஆ) க.பொ.த.(சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவுச் சங்கமொன்றின் எழுதுவினைஞர் பதவியொன்றில் ஒரு (01) வருடத்துக்கு குறையாத அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள்:**

1. வயது 05.11.2020 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
4. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச்சட்டப் பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
5. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
6. சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
7. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும், இணைப்புகளும் உண்மையானதும், செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதை தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

22.10.2020 **தலைவர்**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04 . 10 . 1939



மறைவு
03 . 11 . 2019

## அமரர் மார்க்கண்டு திலகநாதன்

(ஓய்வு பெற்ற வட பிராந்திய நிர்வாக உத்தியோகத்தர் தபால் திணைக்களம்)

**திதி : பூர்வபக்க ஷஷ்டி**

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
எங்களை
வானுயர பெயர் விளங்க வைத்த
எங்கள்
அன்புத் தெய்வமே அப்பா நீங்கள்
இறைவனடி சேர்ந்து ஓராண்டு
கடந்து விட்டாலும் நீங்கள்
எப்பொழுதும் எம்முன் நிற்கின்றீர்கள்
கணவனாய், அப்பாவாய்,
அண்ணனாய்,
மாமாவாய், தாத்தாவாய்,
பெரியப்பாவாய், சித்தப்பாவாய்,
பாசமே வேதமாய் எமை
ஆட்கொண்டீர்கள்
அதனால் தானோ நித்தம் எம்
உள்ளத்தினுள்ளே வாழுமோர்
உன்னத தெய்வமாகி விட்டீர்கள்
அப்பா
உங்கள் நினைவு எழும்
பொழுதெல்லாம் எங்கள் உள்ளம் ஏக்கத்தில்
தவிக்கின்றது
கண்கள் உங்களை தேடுகின்றன!
நீங்கள் எங்களை பிரிந்தாலும்
எங்கள் ஒவ்வொரு அசைவிலும்
நீங்கள் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள்
உங்கள் ஆன்மாவின் சாந்திக்கு
எல்லாம் வல்ல இறைவனை
வேண்டுகின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**புலம் வீதி,
கைதடி மேற்கு, கைதடி.**

**குடும்பத்தினர்
077 763 1681**

# மரண அறிவித்தல்

பிறப்பு
29 . 12 . 1977



இறப்பு
08 . 10 . 2020

## இரத்தினசபாபதி ஆதித்தன்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ்-பரிஸ் நகரை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி ஆதித்தன் கடந்த (08.10.2020) அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் இரத்தினசபாபதி-சண்முகவடிவு தம்பதியரின் பாசமிகு மகனாரும், காலஞ்சென்றவர்களான கதிரேசு- அன்னபூரணி, முத்தையா-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்புப் பேரனும், ஓம்சக்தி, ஆதிசக்தி, சிவசக்தி, மணிகண்டன், ஞானசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் யசோதன், லோகேந்திரன், சுதாகரன், இராகுலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிலாந்தி, புராதனி, பார்கவி, பிரணவிகா, சாத்விகா ஆகியோரின் பாசமிகு பெரிய மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2020) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**30/6, நாவலடி லேன், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.**

**தகவல் :
குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு
18 . 08 . 1961



இறப்பு
15 . 10 . 2020

## குயின்ரஸ் பெர்னாண்டோ

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் திருநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் தற்போது Winipeg - கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட குயின்ரஸ் பெர்னாண்டோ 15.10.2020 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற W.A.F. பெர்னாண்டோ (முன்னாள் புத்துவெட்டுவான் பாடசாலை - அதிபர்) திருமதி ம. பெர்னாண்டோ (முன்னாள் ஆசிரியர் - கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மகனும், நீலா (டல்சி - கிளி / கிளிநொச்சி மகாவித்தியாலய ஓய்வு நிலை - ஆசிரியர்), மாலா (கனடா), மஞ்சு (கனடா), நெவில் (கனடா), அஜந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற றேமன் ஆகியோரின் உடன்பிறந்த அன்புச் சகோதரனும், நிக்ஷன் சுரேஸ், வேணி, மரீனா, பேனாட் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், இருதயநாதர் (அதிபர் - புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்), குணா (கனடா), கெவின் (கனடா), றொனோ (வவுனியா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஹறோல், டொனால், கைல், அனு, ரேனு, தனு, கானு ஆகியோரின் பாசமிகு மாமனும், றெமிண்டனின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2020) வியாழக்கிழமை Winipeg - கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

| | | |
|---|---|---|
| நீலா | :- Sri Lanka | - 077 310 6286 |
| மஞ்சு | :- Canada | - 001 204 990 3164 |
| நிக்ஷன் | :- Canada | - 001 204 333 7631 |
| மாலா | :- Canada | - 001 613 424 9383 |
| அஜந்தன் | :- France | - 33 7689 10496 |

**தகவல்:
குடும்பத்தினர்.**

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம். சந்தைகள், கோழியிறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2021

**வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றிற்கு 2021.01.01 ஆம் திகதி தொடக்கம் 2021.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2020.10.22 - 2020.11.02 நண்பகல் 12.00 மணி வரை**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2020.11.02 பி.ப 2.00 மணி வரை**
**கேள்விதிறக்கும் திகதி :- 2020.11.02 பி.ப 2.30 மணி**

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

01. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. சங்கானை மரக்கறிச் சந்தைக்கு விண்ணப்பப் பத்திரம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் (கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள்) ஏதாவது ஒரு வங்கியில் தங்கள் பெயரில் 2020 நவம்பர் 02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பிருந்து கேள்விப்பத்திரம் பெறும் போது ரூபா 200,000.00 க்கு குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரமாக வங்கி சேமிப்புப் புத்தகம் / வங்கிப் பிணைமுறி / வைப்புச் சான்றிதழ். தானியங்கி இயந்திர அட்டை இருந்தால் அதனையும் சமர்ப்பித்தல் வேண்டும். தானியங்கி இயந்திரம் அட்டை இல்லையாயின் வங்கி முகாமையாளரால் உறுதிப்படுத்த வேண்டும். சித்தியடையாத கேள்விதாரரது வைப்புச் சான்றிதழ் கேள்விதிறந்த மறுநாள் மீளளிக்கப்படும். சித்தியடைந்த கேள்விதாரரது வங்கி சேமிப்புப் புத்தகம் / வங்கிப் பிணைமுறி / வைப்புச் சான்றிதழ். தானியங்கி இயந்திர அட்டை என்பன கேள்வித் தொகையின் 1/3 பகுதியை அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மீளளிக்கப்படும்.

03. சங்கானை மரக்கறி. சந்தைக்கான மின்சாரக் கட்டணம் குத்தகைக்காலப்பகுதியில் குத்தகையாளரால் செலுத்தப்படல் வேண்டும்.

04. சங்கானை மரக்கறிச்சந்தை தவிர்ந்த ஏனைய சந்தைகள் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் குத்தகைக்கு வழங்கப்படும்

05. சங்கானை நவீன மீன் சந்தையில் கோழி இறைச்சிக்கடைக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் இச்சந்தை வளாகத்திற்குள் கோழி விற்பனை. கோழி உரித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

06. சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் மீன் சந்தையின் மீன் வெட்டும் இடத்தினது தூய்மைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் பொதுசுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய பராமரிப்பதுடன் தொடர்ந்து இதனைக் கண்காணித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.

07. பல்லசுட்டி சந்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் அதனை நடாத்துவதற்குரிய இடத்தினை தற்போது சந்தை இயங்கும் இடத்திலிருந்து 500m சுற்றுவட்டத்தினுள் தாமே தெரிவுசெய்தல் வேண்டும். மேலும் தெரிவு செய்த இடத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு பொதுச் சுகாதார பரிசோதகரின் சிபாரிசுக்கமைவாகவே செயற்பட வேண்டும். அத்துடன் தெரிவு செய்யும் இடத்திற்கான குத்தகை அல்லது வாடகை குத்தகையாளராலேயே கொடுக்கப்பட வேண்டும்.

08. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

09. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

10. கேள்வி நிபந்தனைகள். அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும். போதிய காரணங்களால் எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

11. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை. 2020.11.09ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

12. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

13. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம். கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.

14. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும்

15. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% உம். மீன் கிலோ ஒன்றிற்கு ரூபா 5.00 உம். வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம். வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் (மரக்கறிச் சந்தை. மீன் சந்தை. மீன் வெட்டும் இடம்) ஊடு ஒன்றிற்கு (5'X 3') ரூபா 50.00 உம் ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 5.00. உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது.

16. வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் "ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம்" அல்லது "உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் ;" என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும். சந்தைக்கு வெளியே எந்த ஒரு கட்டணத்தையும் அறவிட முடியாது.

17. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டத்தில் மீன். மரக்கறி. கோழி இறைச்சி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

18. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறவிடுமாறு அறிவிக்கப்படும் வரிகள் வாடகைத்தொகை மீள் மதிப்பீடு செய்யப்படின் அத்தொகையும் அறவிடப்படும்.

19. 2015.11.09 ஆம் திகதிய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக் கையில் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

20. மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## 2021 குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| சங்கானை உப அலுவலகம் | | | | | |
| 01 | சங்கானை மரக்கறிச்சந்தை (வாகனப் பாதுகாப்பு நிலையம் தவிர்த்து) | — | 7,319,400.00 | 15,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை நவீன மீன் சந்தை | — | 1,521,960.00 | 5,000.00 | 1,000.00 |
| 03 | சங்கானை கருவாட்டுக்கடை | 1,500.00 | 22,000.00 | 1,000.00 | 250.00 |
| 04 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 01 | 1,500.00 | 242,000.00 | 3,000.00 | 500.00 |
| 05 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 02 | 1,500.00 | 200,200.00 | 3,000.00 | 500.00 |
| சுழிபுரம் உப அலுவலகம் | | | | | |
| 01 | சத்தியகாடு சந்தை | — | 1,331,110.00 | 5,000.00 | 1,000.00 |
| 02 | பல்லசுட்டி சந்தை | — | 3,2450.00 | 1,000.00 | 250.00 |
| 03 | தொல்புரம் மத்திய சந்தை | — | 29,300.00 | 500.00 | 250.00 |
| 04 | பொன்னாலை வாராந்தச் சந்தை | — | 45485.00 | 500.00 | 250.00 |
| வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | | |
| 01 | சங்கரத்தை சந்தை | — | 167420.00 | 3,000.00 | 750.00 |
| 02 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | — | 22000.00 | 1,000.00 | 500.00 |
| 03 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 01 | 1,750.00 | 154,000.00 | 1,000.00 | 500.00 |
| 04 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 02 | 1,750.00 | 155,211.00 | 1,000.00 | 500.00 |
| அராலி உப அலுவலகம் | | | | | |
| 01 | அராலி, செட்டியார்மடம் சந்தை | — | 25,058.00 | 500.00 | 250.00 |

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.
2020.10.21

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

## புலிகள் மீதான...

புலிகள் மீதான தடை நீடிப்புக்கு எதிராக, பிரிட்டன் உள்துறை செயலருக்கு எதிராக ஆறுமுகம் உள்ளிட்ட மனுதாரர்கள் மேன்முறையீட்டு ஆணையத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர். கடந்த ஜூலை மாதம் விசாரித்த நீதிபதிகள் எலிசபெத் லெய்ங், ரிச்சர் விட்டாம், பிலிப் நெல்சன் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று தீர்ப்பை அளித்துள்ளது.

'விடுதலைப்புலிகள் மீதான தடை உத்தரவை நீடிக்க, உள்துறை கவனத்தில் கொண்ட ஆதாரங்களும் காரணங்களும் போதுமானதாக இல்லை. பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடாதபோதிலும், அமைதி நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட வேண்டும் என்பதை உள்துறை கவனத்தில் கொள்ளவில்லை' என்று கூறப்பட்டுள்ளது.

**புலிகள் மீதான குற்றச்சாட்டுக்கள்**

விடுதலைப்புலிகள் இயக்கம், 1991ஆம் ஆண்டில் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியை கொல்ல காரணமாக இருந்தது. 1993இல் இலங்கை பிரதமர் ரணசிங்க பிரேமதாஸாவை கொல்ல காரணமாக இருந்தது. பல தாக்குதல்களுக்கு தற்கொலை குண்டுதாரிகளை பயன்படுத்தியது என்று 1976ல் வேலுப்பிள்ளை பிரபாகரனால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கம், அவர் 2009இல் சாகும்வரை இலங்கையில் உள்நாட்டுப் போரை மிகத் தீவிரமாக செயல்பட்டது. குடிமக்கள், கட்டமைப்புகள், இலங்கை அரசு மட்டுமின்றி நாடுகடந்தும் அதன் செயல்பாடுகள் இருந்துள்ளன என அரசு தரப்பில் விசாரணையின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

2019ஆம் ஆண்டு, செப்ரெம்பர் 25ஆம் திகதி உள்துறையின் தீவிரவாத எதிர்ப்புப்பிரிவின் தலைமை அதிகாரியாக டுகுட் என்ற அதிகாரி இதற்கான சாட்சியத்தை அளித்திருந்தார். தரை, வான் வழி, கடல் வழியாக படைகளை நிறுவியிருந்ததாகவும் அதன் சர்வதேச தொடர்புகள் மிகவும் நெருக்கமாகவே இருந்ததாகவும் கூறியுள்ளார். இராணுவ ரீதியில் விடுதலைப்புலிகள் இயக்கம் தோல்வியுற்றிருந்தாலும், அந்த இயக்கம் கலைக்கப்பட்டதற்கான அறிவிப்பை விடுதலைப்புலிகள் ஒருபோதும் வெளியிடவில்லை என்றும் டுகுட் கூறியிருந்தார்.

இத்தகைய சூழலில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்யப்பட்ட அமைப்புகள் பட்டியலில் இருந்து நீக்க முந்தைய காலகட்டத்திலும் கடைசியாக 2014ஆம் ஆண்டிலும் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், அந்த மனுக்கள் உள்துறையால் நிராகரிக்கப்பட்டன.

**மீளவும் கோரிக்கை**

இதன் பிறகும் 2018ஆம் ஆண்டு, நவம்பர் 27ஆம் திகதி மேலும் 10 பேர் பிரிட்டன் உள்துறையிடம் அதே கோரிக்கையுடன் விண்ணப்பித்தனர். 2018ஆம் ஆண்டு டிசெம்பர் 19ஆம் திகதி தீவிரவாத பகுப்பாய்வு அமைப்பு, விடுதலைப் புலிகள் தொடர்பான அச்சுறுத்தலை மதிப்பீடு செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்தப் பின்னணியில் பிரிட்டன் உளவுத்துறை அளித்த அறிக்கை அடிப்படையில், பிரிட்டனில் விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கும் முன்பாக, அந்த இயக்கத்துடன் தொடர்பில் இருந்த, அதன் ஆதரவாளர்களாக இருந்தவர்களின் செயற்பாடுகள் உலக நாடுகளிலும் இருப்பதால் அதையும் கவனத்தில்கொள்ள வேண்டியுள்ளது என்றும் இதில் எடுக்கப்படும் உறவுகள் சர்வதேச அளவில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்றும் உள்துறை சார்பில் மதிப்பீடு செய்யப்பட்டது.

**சுமந்திரன் கொலை முயற்சி**

2014ஆம் ஆண்டு இலங்கையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்ட மூன்று பேர் (அப்பன், கோபிகன், தெய்வீகன்) சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம், 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம், விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர் 75 சயனைட் குப்பிகள், 300 கிராம் சயனைட் பவுடர் ஆகியவற்றுடன் பிடிபட்டது, 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம், தற்கொலை குண்டுதாரி கவசம், நான்கு கண்ணிவெடிகள், 9 எம்எம் துப்பாக்கி, இரண்டு தோட்டா பெட்டிகள் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டது, 2017ஆம் ஆண்டில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரை (சுமந்திரன்) விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் மூலம் கொல்ல வெளிநாட்டில் உள்ள இயக்கத்தின் ஆதரவாளர்கள் பணியமர்த்தியது, அதே ஆண்டு ஜூலை மாதம், உயர் நீதிமன்ற நீதிபதியின் பாதுகாவலரை முன்னாள் விடுதலைப்புலிகள் உறுப்பினர் கொலை செய்தது, அதே ஆண்டு பொது அமைதியை பாதிக்கும் வகையிலான துண்டு பிரசுரங்கள் இலங்கையில் விநியோகிக்கப்பட்டது போன்ற செயற்பாடுகள், விடுதலைப்புலிகள் இயக்கம் உயிர்ப்புடன் பல வடிவங்களில் இருப்பதை அனுமானிக்க முடிவதாக அரசு தரப்பு ஆணையம் முன்பு சாட்சியம் அளித்தது. ஆனாலும், இவை அனைத்தும் இலங்கையில் அந்நாட்டுக்குள் நடந்த விசயம் என்றும் அவை உண்மையிலேயே விடுதலைப்புலிகள் பின்னணியிலேயே நடந்ததா என்பதற்கான விசாரணை அங்கு நடந்து வரும் நிலையில், அவற்றைக் கொண்டு பிரிட்டனில் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீடிக்க அரசு உத்தரவிடுவது சரியல்ல என்றும் மனுதாரர்கள் சார்பில் ஆணையத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் தனக்கான அதிகாரத்தை உள்துறைச் செயலர் எடுத்த விதம் சரியல்ல என்றும் அவர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. இலங்கையில் ஈஸ்ரர் தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப்புலிகள்தான் ஈடுபட்டதாக ஆரம்பகால சமூக ஊடக தகவல்களில் வலம் வந்த விவரங்கள், வழக்கு விசாரணையின்போது அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அதன் பிந்தைய விசாரணையில், அந்த தாக்குதலில் ஈடுபட்டது வேறு ஒரு இயக்கம் என்று அரசு தரப்பு அதன் நீதிமன்றத்தில் கூறியது.

**அனுமானங்கள்**

இது குறித்து தனது தீர்ப்பில் குறிப்பிட்ட பிரிட்டன் ஆணையம், இந்த விவகாரத்தில் ஊடகங்களில் வந்த செய்திகள் அடிப்படையில் உள்துறைச் செயலர் அவசரப்பட்டு முடிவு எடுக்க தன்னை அனுமதித்துக் கொண்டதாகவே கருதுகிறது' என்று தெரிவித்துள்ளது.

இதைத்தொடர்ந்து விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை நீடிக்க எடுத்த காரணங்கள், 2018ஆம் ஆண்டில் நடந்த சம்பவம் மீது எடுத்த தமது முந்தைய முடிவு எந்த அளவுக்கு தாக்கத்தைக் கொண்டிருக்கும், இதுபோன்ற விவகாரத்தில் உள்துறை செயலர் மட்டுமே முடிவெடுப்பது போதுமானதா? ஆகிய கேள்விகள் எழுவதாக ஆணையம் கூறியுள்ளது. அதைத்தொடர்ந்து உள்துறை சார்பில் முன்வைக்கப்பட்ட விளக்கங்கள் அடிப்படையில், விடுதலைப்புலிகள் மீதான தடையை நீடிக்க செயலர் பிறப்பித்த உத்தரவும் அது தொடர்பான முடிவும் எந்த அடிப்படையில் எடுக்கப்படுகிறது என்ற கருத்தை மட்டுமே ஆணையத்தால் வெளியிட முடியும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

அந்த அடிப்படையில், உள்துறைச் செயலரின் முடிவு தவறானது. அதே சமயம், இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யவும் வாய்ப்பளிக்கப்படுகிறது என்றும் தீர்ப்பில் ஆணையம் தெரிவித்துள்ளது. ஆணையத்தின் தீர்ப்பை கவனத்தில் எடுத்து பிரிட்டன் அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமா என்பது குறித்து இதுவரையும் எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை.

**பின்னணி**

விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு பிரிட்டன் உள்துறை செயலர் 2001ஆம் ஆண்டில் தடை விதித்தார். அந்தத் தடை உத்தரவு அவ்வப்போது காலாவதியாகும் போது, மதிப்பாய்வுக்குழு தரும் அறிக்கை அடிப்படையில் அந்த தடை நீடிக்கப்பட்டு வருகிறது. (ஒ,இ)

## 20ஆவது....

இடம்பெறவுள்ளது. திருத்தச் சட்ட வரைவு நிறைவேற மூன்றிலிரண்டு 150 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ஆளும் கட்சிக்கு இன்று கிடைக்குமா என்பது சந்தேகத்துக்குரியதாகியுள்ளது. ஆளும் கட்சியின் 17 நாடாளுமன்ற உறுப்பினர்கள், 20ஆவது திருத்தச் சட்ட வரைவில் உள்ள இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் தேர்தல்களில் போட்டியிட முடியும் என்ற வரைவை நீக்கவேண்டும் என்று அவசர அவசரமாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு கடிதம் எழுதியுள்ளனர். அந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படாமல் ஆதரிக்கோம் என்ற நிலைப்பாட்டை அவர்கள் எடுத்துள்ளமையால் 20ஆவது திருத்தச் சட்டவரைவு நிறைவேறுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

20ஆவது திருத்தச் சட்ட வரைவு ஜனாதிபதிக்கு கட்டுமட்டில்லா அதிகாரங்களை வழங்கும் வகையில் தயாரிக்கப்பட்டது. உயர் நீதிமன்றம் சட்டவரைவின் 4 சரத்துக்களை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்பும் தேவை என்று தெரிவித்துள்ளது. இதனையடுத்து அந்தச் சரத்துக்களை திருத்திக் கொண்டு, மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றும் நோக்குடன் நாடாளுமன்றத்தில் நேற்று திருத்தம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

**கைகலப்பு**

20ஆவது திருத்தச் சட்டவரைவில் உள்ள இரட்டைக்குடியுரிமை விவகாரத்தை நீக்கவேண்டும் என்று ஆளும் கட்சியின் 17 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து கடிதம் எழுதியுள்ளனர். இது தொடர்பான கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. இதன்போது பஸில் ராஜபக்ச ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த கொட்டகொட அங்கு சென்று கடிதம் தயாரிக்கும் பணியை நிறுத்தக் கோரியுள்ளார். இதன்போது விமல் வீரவன்ச அவரைத் தாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

**சமரச முயற்சி**

கடிதம் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டதும், ஜனாதிபதி 17 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அவசர சந்திப்பை நடத்தியுள்ளார். இதன்போது இரட்டைக் குடியுரிமை விவகாரம் 20ஆவது திருத்தச் சட்டவரைவில் இருக்கும். புதிய அரசமைப்பு தயாரிக்கும்போது அதனை நீக்கி விடுவதாக உறுதியளித்துள்ளார். இருப்பினும் 17 நாடாளுமன்ற உறுப்பினர்களும், இரட்டைக் குடியுரிமை விவகாரம் நீக்கப்படாமல் திருத்த வரைவுக்கு ஆதரவு வழங்கமாட்டோம் என்று உறுதியாகத் தெரிவித்துள்ளனர். இவர்களுடன் இன்று மதியமும் கோத்தாபய சந்திப்பு நடத்தவுள்ளார்.

**ஆதரவு**

சிறிலங்கா சுதந்திரக் கட்சி 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்தாலும், இரட்டைக் குடியுரிமை விவகாரத்தில் அந்தக் கட்சியும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

**வளைத்துப்போட முயற்சி**

இதேவேளை ஆளும் கட்சியிலிருந்தே திருத்த வரைவை நிறைவேற்றுவதற்குத் தேவையான 150 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் திரட்ட முடியாத நிலையில், எதிர்த் தரப்பிலிருந்து குறிப்பாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை வளைத்துப் போடுவதற்கான பேரம் பேசல் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. இந்த விடயத்தை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் அம்பலப்படுத்தினார்.

**இரவு முடிவு**

நாடாளுமன்றத்தில் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை அரசால் உறுதி செய்யப்படாது போனால் இன்று வாக்கெடுப்பு நடக்காமல் போகக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5,22,44)

## '20' இற்கு எதிரணியிலுள்ள 6 முஸ்லிம் எம்.பிக்கள் ஆதரவு

கொழும்பு, ஒக். 22

20ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு எதிரணியிலுள்ள 6 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கக்கூடும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் நேற்றுப் பின்னிரவு தகவல் வெளியிட்டன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த 4 பேரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸை சேர்ந்த 2 பேரும் ஆதரவு வழங்கக்கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆளும் தரப்பினுள்ளேயே 20ஆவது திருத்தச் சட்டவரைவை எதிர்ப்பதனால் அது நிறைவேறுவது சந்தேகம் என்று நேற்றுத் தகவல் வெளியாகியிருந்தது. எதிரணி முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை குறிவைத்து 'டீல்' இடம்பெற்றுவருகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், எதிரணியிலுள்ள 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20ஆவது திருத்தச் சட்டவரைவை ஆதரிக்கவுள்ளனர் என நேற்றுப் பின்னிரவு தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஒ,5)

## இன்றும்...

சேவிதர், சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு நேற்று மாலை கடிதம் அனுப்பி வைத்துள்ளார். நாடாளுமன்ற படைக்கள சேவிதர் இது தொடர்பில் சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளார். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது அரச சொத்து துஷ்பிரயோகம் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் தெஹிவளையில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட ரிஷாத் பதியுதீன், எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் நீர்கொழும்பு சிறையில் 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளார்.

**நாடாளுமன்றத்தில் கடும் வாக்குவாதம்**

இதேவேளை, முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் அவர் நாடாளுமன்றத்துக்கு வருகை தர அனுமதிக்க முடியாது எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்றுக் காலை சபையில் தெரிவித்ததையடுத்து கடும் வாதப்பிரதிவாதம் ஏற்பட்டது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல, ரிஷாத் பதியுதீனை இன்று (நேற்று) நாடாளுமன்றத்துக்கு அழைப்பதாகக் கூறினீர்கள். அது தொடர்பில் எடுத்த நடவடிக்கை என்ன?' என்று சபாநாயகரிடம் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு கூறிய சபாநாயகர் மேலும் தெரிவித்ததாவது:

ரிஷாத் பதியுதீனை நாடாளுமன்றம் அழைப்பது தொடர்பில் நடவடிக்கை எடுத்தேன். ஆனால், அவர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இரு வாரங்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் நாடாளுமன்றத்துக்கு வருகை தர அனுமதிக்க முடியாது எனச் சிறைச்சாலை கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனவே, என்னால் சுகாதார அதிகாரிகளுடன் இணங்கித்தான் செயற்பட முடியும்' என்றார்.

இதையடுத்து எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து கூச்சல்கள் எழுந்தன. சிறையில் உள்ள பிரேமலால் ஜயசேகரவுக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்படவில்லை. அவர் நாடாளுமன்றம் வருவதற்கும் அனுமதிக்கப்படுகின்றது. ரிஷாத்துக்கு மட்டும் ஏன் பி.சி.ஆர். பரிசோதனை, அனுமதி மறுப்பு?' என்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், 'இது தொடர்பில் நான் சுகாதார அமைச்சருக்கு கூறுகின்றேன்' என்றார்.

இதன்போது எழுந்த அசோக் அபேசிங்க, 'வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவும் பி.சி.ஆர். பரிசோதனை செய்துள்ளார். அப்படியானால் அவர் எப்படி சபைக்கு வர முடியும்?' என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு அமைச்சர் பந்துல குணவர்தன பதிலளிக்கையில், 'வர்த்தக அமைச்சில் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் புறக்கோட்டை வர்த்தகர் ஒருவரும் கலந்துகொண்டார். அவரின் கணக்காளருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்ததால் என்னை பி.சி.ஆர். பரிசோதனை செய்யுமாறு புலனாய்வுத்துறையினர் கூறினர். அதன்படியே நான் பி.சி.ஆர். பரிசோதனை செய்தேன். அதில் நான் நீண்ட காலம் உயிர் வாழ முடியும் எனத் தெரியவந்தது' என்றார். எனினும், எதிர்க்கட்சியினர் தொடர்ந்தும் ரிஷாத்துக்கு மட்டும் ஏன் இந்த அநீதி எனக் கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தனர். இதன்போது எழுந்த சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, 'சிறைச்சாலைகளில் 32 ஆயிரம் கைதிகள் உள்ளனர். எனவே, விளக்கமறியலில் உள்ளவர்களை பி.சி.ஆர். பரிசோதனை நடத்தி 14 நாள்கள் தனிமைப்படுத்தியே சிறைக்கு அனுப்புகின்றோம். அது தான் நடைமுறை, என்றார். இதன் பின்னர் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே, நாடாளுமன்றத்துக்கு ரிஷாத்தை அழைத்து வருவதற்கான இணக்கம் காணப்பட்டது. (ஒ,22)

## தீயில் எரிந்து...

யின் தாய் நேற்று உயிரிழந்துள்ளார். விஜயா (வயது- 24) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். அவரது வீட்டில் நேற்றுமுன்தினம் தவறுதலாக தீ பரவியதால் இந்த விபத்து ஏற்பட்டு உயிரிழந்ததாக தமது முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் குறிப்பிட்டனர். காயமடைந்த அவர் உடனடியாக மீட்கப்பட்டு செட்டிகுளம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சை களுக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இருப்பினும் அவர் உயிரிழந்துள்ளார். (ஒ,110)

## பிரிட்டன் அரசு...

அறிவித்திருந்தாலும், பிரிட்டன் அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்காது என்று நம்புவதாக இலங்கை அரசின் பேச்சாளரும், அமைச்சரவைப் பேச்சாளருமான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை பிரிட்டன் அரசு தடை செய்தது தவறு என்று பிரிட்டனில் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் தொடர்பான விசேட ஆணையம் தீர்ப்பு வழங்கியிருந்தாலும் அதைப் பிரிட்டன் அரசு நடைமுறைக்குக் கொண்டுவரும் என்று நாம் நம்பவில்லை. எனினும், தீர்ப்புக்கமைய பிரிட்டன் அரசு செயற்பட்டாலும் அது தொடர்பில் நாம் அலட்டிக்கொள்ளவும் மாட்டோம். வெளிநாடுகள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடைப் பட்டியலிலிருந்து நீக்கினாலும் இலங்கை அரசு ஒருபோதும் அதைச் செய்யவே மாட்டாது. நாட்டில் மீண்டும் ஒரு போரை இரத்தக்களரி நாம் விரும்பவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மோசமான பயங்கரவாத அமைப்பு. இதை வெளிநாடுகள் கவனத்தில்கொள்ள வேண்டும். அந்த அமைப்பை இலங்கையில் நாம் இல்லாதொழித்தாலும் குறித்த அமைப்பைச் சேர்ந்த சிலர் வெளிநாடுகளில் தஞ்சம் கோரி அரசியல் நடத்துகின்றனர். அவர்கள் தொடர்பில் வெளிநாட்டு அரசுகள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும், என்றார். (ஒ,5,22)

## சமூகத்தில்....

ஊழியர்கள் 3 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா வடக்கின் பல்வேறு பகுதிகளில் வீதி திருத்தும் பணிகளில் மாகா நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது. அவர்களது இணைப்புக்காரியாலம் ஒட்டுசுட்டான் வீதி நெடுங்கேணியில் அமைந்துள்ளது. அங்கு பணியாற்றும் 25பேருக்கு வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் பிசிஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

தென்பகுதியிலிருந்து அலுவலகத்துக்கு அண்மையில் வருகைதந்திருந்த 3 பணியாளர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவர்கள் மூவரும் பிலியந்தல, பதுளை, தெகியோவிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள். மேற்படி நிறுவனத்தில் வெளிமாவட்டங்களை சேர்ந்த பணியாளர்கள் பணிபுரிந்து வருவதுடன் உள்ளூர் தொழிலாளிகளும் இணைந்து பணியாற்றிவருகின்றனர். மூவருக்கு கொரோனோத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து வவுனியா வடக்கில் பணியாற்றிவரும் சுமார் 28பேர் அவர்கள் தங்கியிருந்த இடங்களிலேயே சுயதனிமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளன. (ஒ,110)

## கோப்பாய்...

மைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் கிடைத்த பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையில் அவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதையடுத்து அவர் மருதங்கேணி கொவிட்-19 சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை தென்னிலங்கையிலிருந்து நேற்றும் 9 நோயாளர்கள் மருங்கேணிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். (எ,ஒ,26)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

# பெறுகைக்கான அழைப்பு.

## சபைநிதி வேலைத்திட்டம் - 2020

1) தலைவர், பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், வழங்குநர்களிடமிருந்தும் அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு கட்டடம், வீதி வேலைகளுக்காக கோரப்படுகின்றது
2) கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி கட்டடம், வீதி புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் சீடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3) தேவையான தகமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule ) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
4) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.தொடர்புகளுக்கு 0212255381 / 0212256646. அத்துடன் மேற்கூறிய இடத்தில் 22.10.2020 தொடக்கம் 04.11.2020ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 15.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
5) ஆர்வமுள்ள கேள்விதார்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் இடத்திலிருந்து **22.10.2020ந்** திகதியிலிருந்து **04.11.2020ந்** திகதி வரை காலை 9.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் கோரிக்கை கடிதத்துடன் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/-(வரி நீக்கலாக) இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்பட்டு, ஆவணத்தினை பெற்றுக்கொள்ளவும் முடியும்.
6) பெறுகை ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக இரு உறைகளில் இட்டு **05.11.2020ந்** திகதி பி.ப 14.30 மணிககு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலம்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வி யானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7) கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.
8) கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்வி பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(16)/W/CF/2020/63 | மாதகல் கிராம உப அலுவலகம் அதனுடன் இணைந்த பொதுநூலகம் புனரமைத்தல் கட்டடம் II | 6.0 | 90 நாட்கள் | C7 | 77 நாட்கள் | 06.01.2021 | 60,000.00 | 03.02.2021 |

9) கேள்வி தொடர்பான முதற்கூட்டம் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமை அலுவலகத்தில் 30.10.2020ந் திகதி பி.ப 14.30 மணிக்கு நடைபெறும்.

அ.ஜெபநேசன்
தவிசாளர்,
பிரதேசசபை பெறுகைக்கு
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.
21.10.2020.

### இந்தியப் படைகளின் வெறியாட்டத்தால் நிகழ்ந்த

# மருத்துவமனைப் படுகொலை: 33ஆவது நினைவேந்தல் நேற்று

யாழ்ப்பாணம், ஒக்.22

இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணியாளர்களின் 33ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் புகுந்த இந்திய இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வைத்தியாலை பணியாளர்கள் 21 பணியாளர்கள் உட்பட 85 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

அவர்களுக்கு நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர்கள், கணக்காளர், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கலந்துகொண்டனர்.



பொதுச் சுடர் ஏற்றப்பட்டு உயிரிழந்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது. உயிரிழந்தவர்களின் உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு சுடரேற்றப்பட்டது. (எ-111,20,106)

# பெங்களூர் வெற்றி

| | |
|---|---|
| கே.கே.ஆர். | 84/8 (20) |
| மோர்கன் 30 | சிராஜ் 8/3 (4) |
| ஆர்.சி.பி. | 85/2 (13.3) |
| படிக்கல் 25 | பேர்குசன் 17/1 (4) |

ஆட்ட நாயகன்




# மதுஷ் கொலை பற்றி விசாரணை நடக்குமாம்

### பொலிஸ் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, ஒக்.22

மாகந்துரே மதுஷ் இறந்துவிட்டார் என்பதற்காக விசாரணைகள் நிறுத்தப்படாது. அவை தொடர்ந்தும் இடம்பெறும். அதேபோல் அவர் வெளிப்படுத்திய அனைத்துப் பதிவுகளும் பொலிஸ் புத்தகத்தில் உள்ளன. அதனால் எதையும் மூடிமறைக்க முடியாது.

இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண நேற்று தெரிவித்தார்.

மாகந்துரே மதுஷ் கொல்லப்பட்டுள்ள நிலையில் அவர் வெளிப்படுத்திய அனைத்து தகவல்களும் மூடிமறைக்கப்படும் என்றும், அவருடன் தொடர்பு வைத்திருந்த 80 அரசியல்வாதிகள் தப்பிவிடுவார்கள் என்றும் எதிரணி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாகக் கேள்வி எழுப்பியபோதே ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஏதேனும் ஒரு விசாரணை நடைபெறும்போது அது தொடர்பான தகவல்கள், தரவுகள் முன்னர் பொலிஸ் புத்தகத்தில் மாத்திரமே பதிவுசெய்யப்படும். ஆனால் தற்போது ஒலி மற்றும் ஒளிப்பதிவும் செய்யப்படும் நடைமுறையும் இருக்கின்றது. மாகந்துரே மதுஷிடம் பல மாதங்கள் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. அவை தொடர்பான தகவல்கள் பொலிஸ் புத்தகத்திலும், குற்றப்புலனாய்வுப் பிரிவின் 'பேட்'டிலும் விசேட இலக்கத்துடன் உள்ளன.

பொலிஸ் புத்தகத்தில் தகவல்களை பதிவிட்டுவிட்டு அவற்றை அவ்வாறே வைத்திருக்கமுடியாது. தாமதமின்றி அது தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். தேவையேற்படின் அந்தப் புத்தகங்களைக் கொண்டுவந்து விசாரிக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு இருக்கின்றது. சில சமயங்களில் அதன் பிரிதிகளைக்கூட மாற்று தரப்புகளுக்கு வழங்கலாம்.

பொலிஸ் புத்தகத்தில் பதிவான தகவல்களை ஒருபோதும் மறைக்க முடியாது. அவை நிச்சயம் வெளிச்சத்துக்கு வரும். நீங்கள்கூறுவதுபோல யாராவது குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருந்தால் நிச்சயம், விசாரணைகள் இடம்பெறும். கடந்தகாலங்களில் அவ்வாறான விசாரணைகள் இடம்பெற்றுள்ளன. வெளிப்படுத்திய தகவல்களை எவராலும் மறைக்க முடியாது. நீதிமன்றத்தின் முன்னிலையில்தான் அவை முடிவுக்கு வரும். தகவல்கள் நீதிமன்றத்துக்கு வழங்கப்படும்.

அதேவேளை, போதைப்பொருள் விவகாரம், நிதி மோடி, கடத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடையவர்கள் தொடர்பான தகவல்களை மதுஷ் வெளியிட்டிருந்தால் நிச்சயம் விசாரணை நடைபெறும், ஒருவர் இறந்துவிட்டார் என்பதற்காக அதனுடன் தொடர்புட்ட ஏனைய சந்தேக நபர்கள் விடுபடமுடியாது. அதற்கு சட்டத்திலும் இடமில்லை. என்றார். (எ-44)

# அறைந்தார் அதிகாரி; கிழிந்தது ஒரு காது

### யாழில் சிப்பாய்க்கு இந்தநிலை

கொழும்பு, ஒக். 22

காது சவ்வு கிழிந்த நிலையில் இராணுவச் சிப்பாய் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இராணுவ அதிகாரி சிப்பாய்க்கு அறைந்ததாலேயே சிப்பாய் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்த அதிகாரி (சார்ஜன்ட்) மீது இராணுவச் சிப்பாய் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் முகாமின் உயர் அதிகாரியால் நேற்றுக் காலை பணிக்கப்பட்ட வேலைகளைச் செய்ய இராணுவ அதிகாரி (சார்ஜன்ட்) ஒருவர் தனக்கு கீழ் பணியாற்றும் இராணுவச் சிப்பாய்க்குப் பணித்துள்ளார்.

உயரதிகாரி தெரிவித்த வேலைகளைச் செய்ய வருமாறு அழைத்தபோது இராணுவச் சிப்பாய் மறுத்ததால் இராணுவ அதிகாரி சிப்பாய்க்கு அறைந்துள்ளார். அதில் சிப்பாயின் காது பாதிக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், இராணுவத்தினராலும் இது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-106)

# "20" க்கு எதிராக நூதனப் போராட்டம்

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைபுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நேற்று நூதன முறையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்று ஆரம்பமானது. அப்போது '20 வேண்டாம்' என்ற வசனம் பொறிக்கப்பட்ட முகக் கவசத்தை அணிந்து கொண்டு, கையில் பட்டியும் அணிந்துகொண்டு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சபை நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதேவேளை, '20' வேண்டாம் என்ற கொடிகளை பறக்கவிட்டவாறு ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்கள் நாடாளுமன்ற வளாகத்துக்கு அணிவகுந்து வந்தன. பின்னர் 'அழிவை ஏற்படுத்தும் 20 வேண்டாம்' என்ற கோஷத்தை எழுப்பியவாறே ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சபைக்குள் வந்தனர். (எ-44)

# விஜய் சேதுபதியின் மகளுக்கு மிரட்டல் விடுத்தவர் இலங்கையில்

நடிகர் விஜய்சேதுபதியின் மகளுக்கு சமூக வலைத்தளங்களில் ஒன்றான ருவிட்டரில் பாலியல் மிரட்டல் விடுத்த நபர் இலங்கையில் உள்ளார் என்பது கண்டறியப்பட்டுள்ளது என சென்னை மத்திய குற்றப்பிரிவின் 'சைபர் கிரைம்' பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாலியல் அச்சுறுத்தலைக் கண்டித்த தி.மு.க. எம்.பி. கனிமொழி, சம்பந்தப்பட்ட நபர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

இது தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸ் அதிகாரி மகேஷ் குமார் அகர்வால் தனது டுவிட்டர் பக்கத்தில், "விஜய் சேதுபதியின் மகளுக்கு பாலியல் வன்கொடுமை மிரட்டல் விடுத்த நபர்மீது சென்னை மத்திய குற்றப்பிரிவின் 'சைபர் கிரைம்' பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆபாச மிரட்டல் விடுத்தவர் இலங்கையில் உள்ளார் என்பது தெரியவந்துள்ளது. இண்டர்போல் உதவியுடன் அந்த நபரைப் பிடிக்க மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்" என்றும் பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் வகையில் '800' என்ற தலைப்பிலான திரைப்படத்தில் முத்தையா முரளிதரன் வேடத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடிக்கவிருந்தார். எனினும், போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையனவாக முரளிதரன் கூறியிருந்த கருத்துகளை மையமாகக்கொண்டு விஜய் சேதுபதிக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியது. பின்னர் அந்தப் படத்தில் நடிப்பதிலிருந்து அவர் விலகிவிட்டார். (த)

**வேலையாள்கள் தேவை**
மேசன் வேலையாள்கள் தேவை. (அனுபவம் உள்ளவர்கள் மட்டும்.)
தொடர்பு: 076 660 1600

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் அரியாலை பொன்னம்பலம் வீதியில் 11 பரப்பு காணி விற்பனைக்குண்டு. 1 பரப்பின் விலை ஒன்பது லெச்சம் ரூபாய் (900 000/-).
பிரித்து கொடுக்கப்படும் 2 பரப்பாக.
தரகர் தேவையில்லை
0776234204, 0766400974



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.